Registered as a News Paper
பொழிவு: 25
குவிப்பு: 01
பக்கங்கள்: 16
விலை: 40/-
ஜனவரி: 2021

# மன்னா

(ISSN 1800-2641) MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 118 / News / 2020"

## "அன்பியமும் சாட்சிய வாழ்வும்" – அன்பிய யூபிலி ஆண்டு 2021

# இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

Happy New Year 2021

வாசகர்களே, அன்பான வாடிக்கையாளர்களே, விநியோகஸ்தர்களே, எழுத்தாளர்களே மற்றும் இறை நம்பிக்கையாளர்களே உங்கள் அனைவருக்கும் மன்னா பத்திரிகையின் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.
"ஆண்டவர் உனக்கு ஆசி வழங்குவாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச் செய்து உன்மீது அருள்பொழிவாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக!" (எண் 6: 24 26)

## இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

நாம் அனைவரும் தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவாவை ஜனவரி 15ம் திகதி கொண்டாடவுள்ளோம். அகிலத்தைப் படைத்த ஆண்டவருக்கு அவர் வழங்கிய வாழ்வின் நிறைவிற்காக நன்றி கூறுவோம். எம் மன்னாப் பத்திரிகையின் அன்பான வாசகர்களே அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களையும், உங்கள் உள்ளங்களும் இல்லங்களும் இறையன்பால் பொங்கி வழிய வேண்டுமென்று இறையாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## திருப்பாலத்துவசபை தினம் 17.01.2021




தை மாதம் 17ஆம் திகதி பொதுக்காலத்தின் 2ஆம் ஞாயிறு திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு ஆகும். இத் திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறானது "இறை கொடையாம் பிள்ளைகளைக் காத்திடுவோம்" என்னும் கருப்பொருளை எடுத்துரைப்பதோடு எவ்வேளையிலும் எம்முடைய கடமைகள், பொறுப்புக்களை உணர்ந்து வாழவும் அழைப்பு விடுக்கின்றது. திருப்பாலர் சபை தூதுவர்கள் அனைவருக்கும் திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு ஒரு விசேட நாளாகும். அத்தோடு மறைதூதுவர்களாகிய நீங்கள் அனைவரும் பெற்றுக்கொண்ட ஒரு உன்னத அழைப்பாகும். எனவே திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தினத்தைக் கொண்டாடும் சிறுவர்களாகிய நீங்கள் தீய நாட்டங்களில் இருந்து விலகி இயேசுவின் அன்பினால் நிரப்பப்பெற்று வாழ ஆசிக்கின்றோம்.

## மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 40 ஆண்டுகள் நிறைவு விழா




மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 40வது ஆண்டு யூபிலி விழா (1981) எதிர்வரும் ஜனவரி மாதம் 30ஆம் திகதி காலை 7.30 மணிக்கு தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலய வளாகத்தில் இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதி தலைமையில் நடைபெறும்.

15

## மடு மாதா மருத்துவ நிலைய திறப்புவிழா

MADHU MAATHAA MEDICAL CENTRE
No-09, Field Street, Pettah, Mannar.

கரிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஒரு பிரிவாக இயங்கி வரும் "உதவிக்கரம்" வளாகத்தில் "மடுமாதா மருத்துவ நிலையம்" கடந்த 31.12.2020 அன்று மன்னார் ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. இம் மருத்துவ நிலையம் இல. 9, வயல்வீதி, பெற்றா என்ற முகவரியில் அமைந்துள்ளது.

14

## உள்ளே...

ஆயர் பேரவையின் அறிக்கை - பக்கம் 2
புனித யோசேவ்வாஸ் இலங்கையின் திருத்தூதர் இம்மாத திருவழிபாட்டு விழாக்கள் - பக்கம் 4
திருவழிபாடும் நமது அன்பியமும் அன்பிய யூபிலி ஆண்டு சிறப்புக் கட்டுரை - பக்கம் 6
மன்னார் மறைமாவட்டம் உதயமாகி... மன்னார் மறைமாவட்டத்தின் வரலாற்றுத் தடங்கள் - பக்கம் 7
கலையருவியின் ஏற்பாட்டில்... - பக்கங்கள் 8,9
புனித கன்னி மரியா இறைவனின் தாய் கட்டுரைகள் - பக்கம் 11

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

# மன்னா

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

### புத்தாண்டை மகிழ்வோடு வரவேற்போம்

இப்புதிய ஆண்டில் வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக் களையும் நிறைந்த இறையாசிகளையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

ஒவ்வொரு ஆண்டும் பல வகையான மனித உணர்வலைகளோடு, அதன் தாக்கங்களோடு பிறந்தாலும் இறைவனுடைய பிரசன்னத்தில் அவரது திட்டத்தின்படி இறையாசீரையும் புதிய புதிய இறை அனுபவங்களையும் தருகின்றது. ஒரு குழந்தை பிறக்கின்ற பொழுது அதைக் கடவுளுடைய கொடை என்கின்றோம். பிறந்த பின்பு ஒவ்வொரு ஆண்டுக் குள்ளும் நாம் நுழைகின்ற பொழுது அதை ஏன் நாம் உயிர்வாழ்வதற்கான இறைவனின் கொடை என்று உணர்வதில்லை. ஆகவே கடந்த ஆண்டில் நாம் பெற்ற அனுபவ உணர்வுகளோடு புதிய ஆண்டை இறைவனின் கொடையாகவும் அவரின் ஆசீராகவும் விசுவாசப் பார்வையில் நேர்மறை எண்ணங்கள் கொண்டு நம்பிக்கையோடும் மகிழ்வோடும் வரவேற்போம்.

**அன்பிய யூபிலி ஆண்டு**

இலங்கைத் திருஅவை அன்பிய சிறு குழுக்கள் (ASIPA) வழிபாட்டு முறை ஏற்படுத்தப்பட்டு 25 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற யூபிலி ஆண்டை நினைவுகூருகின்றது. இவ் யூபிலி ஆண்டில் அன்பிய சிறு குழுக்கள் வழியாக அல்லது அயல் குடும்பங்கள் வழியாக அல்லது அன்பிய குட்டித் திருஅவை வழியாக இறைவன் ஆற்றிய நன்மைகளுக்காக நன்றி சொல்லுவதோடு அன்பிய நீரோட்டத்தில் பங்குத் திருஅவை அல்லது மறைமாவட்டத் திருஅவைக்கு தனிப்பட்ட முறையிலும் குடும்பமாகவும் பங்களிப்பை வழங்காத சந்தர்ப்பங்களையும் நினைவுகூரும் அரிய வாய்ப்பாகும்.

**மறைமாவட்ட உதயத்தின் ரூபி யூபிலி விழா**

திருவிவிலியப் பார்வையில் யூபிலி விழாவை நன்றியின் விழாவாக, நிறைவின் விழாவாக நோக்குகின்றோம். கிறிஸ்தவ வாழ்க்கையில் பிறப்பு, குருத்துவம், திருமணம் போன்ற பல முக்கியமான வாழ்க்கை நிகழ்வுகளை வெள்ளி, பொன், வைர, பவள, அமுத மற்றும் நூற்றாண்டு விழாக்களாக நினைவுகூர்ந்து சிறப்பாகக் கொண்டாடுகின்றோம்.

ஆகவே மறைமாவட்டம் உதயமாகி 40 வருடங்களை நிறைவு செய்கின்ற வேளையில் நன்றியின் உணர்வோடு இவ் ரூபி யூபிலி விழாவில் பல விடயங்களை மறைமாவட்டமாக, பங்குத் திருஅவையாக, குடும்பக் குட்டித் திருஅவையாக ஆய்வுக்குட்படுத்தி மீண்டும் ஒரு புதிய யூபிலி ஆண்டை எதிர்கொள்ள புதிய எண்ணங்கள், வழிமுறைகள், அணுகுமுறைகள் ஆகியவற்றோடு எம் கிறிஸ்தவ வாழ்வைத் தொடர்வோம்.

**அன்புடன் மன்னா பதிப்பாசிரியர்,**
**அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா**

### மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி

## ஜனவரி 2021

**01.** புனித கன்னி மரியா இறைவனின் தாய் - கடன் திருநாள்

**06.** மேதகு பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை - குருப்பட்டம் (1973)
அருட்பணி.மேரி பஸ்ரியன் அடிகளாரின் நினைவு தினம் (1985)
குழந்தை இயேசு திருவிழா - பிரமணாலங்குளம்

**10.** புனித வனத்துச்சின்னப்பர் திருவிழா -கணேசபுரம்

**12.** புனித ஜோசேவ்வாஸ் திருவிழா - தரணிக்குளம்

**16.** புனித ஜோசேவ்வாஸ் திருவிழா - செட்டிகுளம், புதுக்காடு, மடுக்கரை, பூமலர்ந்தான், கள்ளிக்குளம், பெரியகுளம், கன்னாட்டி

**20.** புனித செபஸ்தியார் திருவிழா - பேராலயம், முதலியார்கமம், நீராவிபுரம் முத்தரிப்புத்துறை, கட்டைக்காடு, கண்டல், தவசிகுளம், பறயனாலங்குளம்.

**21.** புனித செபஸ்தியார் திருவிழா -கொண்டச்சிக்குடா, கொக்குப்படையான், தெற்கிலுப்பைக்குளம்.

**22.** குழந்தை இயேசு திருவிழா - காந்திநகர்
புனித பவுல் திருவிழா - பூலார் குடியிருப்பு

**26.** புனித செபஸ்தியார் திருவிழா - மறவன்குளம்

**30.** மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 40 ஆண்டுகள் நிறைவு (1981) காலை 7:30 மணிக்கு தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலயத்தில் கூட்டுத்திருப்பலி நடைபெறும்.

**31.** குழந்தை இயேசு திருவிழா - தாஸ்கோட்டம், பறண்நட்டகல்.

## "சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) ஊடாக கிறிஸ்தவ வாழ்வின் புதுப்பித்தலை நோக்கி"

# இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் மேய்ப்புப்பணி மடல்




**இயேசுக்கிறிஸ்துவில் பேரன்புமிக்க சகோதர சகோதரிகளே,**

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையினால் மிக நீண்ட தியானிப்பு மற்றும் கற்றல் போன்றவற்றின் ஊடாக இலங்கைக்கான நற்செய்தி அறிவிப்புப் பணியின் மாதிரிகை சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் 'அன்பியம்' (ஆசிபா) எனப்படும் ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறை (ASIPA) என அறிக்கையிட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் (அன்பியங்களின்) 25 ஆண்டுகள் பூர்த்தியினை முன்னிட்டு எங்களது மனம் நிறைந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சிறிய கிறிஸ்தவக் குழுமங்களே (அன்பியமே) ஆசியாவில் 'திருஅவையாக திகழ்வதற்கான வழியாகும்'. 'திருஅவை ஓர் உறவுக் குழுமம்' என்பதை திருஅவையின் போதனைகள் குறிப்பிடுகின்றன. இன்னும் சொல்லப்போனால், 'உறவு' எனும் பார்வை திருஅவையினை தனித்த ஒருங்கிணைந்த குழுமமாக உருவாக்குகின்றது. ஒவ்வொரு தனித் திருஅவையும், சிறப்பாக ஒவ்வொரு மறைமாவட்டத் திருஅவையும் தங்களது தலைமை மேய்ப்பராகிய ஆயரின் கீழ், தங்களது பங்குத் திருஅவைகளில் உறவினைக் கட்டியெழுப்பி, அவற்றினை நம்பிக்கை, அன்பு, பகிர்வு கொண்ட குழுமங்களாக மாற்றி அமைக்க வேண்டும்.

இவ்வுறவின் அடிப்படை மூவொரு இறைவனாகும். 'தாம் தந்தையுடனும், தூய ஆவியுடனும் இணைந்திருப்பது போல தம்மிலே நம்பிக்கை கொண்டுள்ள அனைவரும் ஒன்றாய் இருப்பார்களாக' என்று இயேசுகிறிஸ்து தந்தையிடம் இறை வேண்டல் செய்தார் (காண்க. யோவா. 17:20-23).

திருஅவையின் இலக்கினைப் பின்பற்றியும், இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையினால் இது சார்ந்து மேற் கொள்ளப்பட்ட படிப்பினைகளின் ஒளியிலும் சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) 1995ஆம் ஆண்டில் அனைத்து மறைமாவட்டங்களினதும் மேய்ப்புப்பணி முன்னுரிமையாகக் கொண்டு அமுல்படுத்திட அறிமுகம் செய்யப்பட்டது. இன்றைய சூழலில் நாம் எதிர்கொள்கின்ற பல்வேறுபட்ட சவால்களாகிய அடிப்படைவாதம், மதச்சார்பின்மை, தீவிரவாதம், பொருதார வறுமை போன்றவற்றின் மத்தியில் சிறிய கிறிஸ்தவ குழமங்களை (அன்பியங்களை) கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது. நாம் குழுமங்களாக ஒன்றாக இருப்பதன் வாயிலாகவே இந்தச் சவால்களை திறம்பட எதிர்கொள்ள முடியும். சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) இறை வார்த்தையில் அடித்தளமிடப்பட்டுள்ள குழுமங்களின் குழுமங் களாகும். இன்றைய காலகட்டத்தில் நமது மக்கள் இறை வார்த்தையினை மிகவும் அழமாக அறிந்திட மன விருப்பமும், தாகமும் கொண்டுள்ளார்கள். கிராமமாக ஒன்றுகூடி இறைவார்த்தையினை வாசித்துத் தியானித்து அதன் வழியாக இறைமக்களின் நம்பிக்கை வாழ்வுப் பயணத்தை உறுதிப்படுத் துகின்ற சிறிய கிறிஸ்தவக் குழுமங்களை (அன்பியங்களை) மெச்சுகின்றோம்.●

(அடுத்த இதழில் தொடரும்)

## மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்களுக்கான

# புதிய பணி நியமனங்கள்

**மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த சில குருக்களுக்கான புதிய பணி நியமனங்களை அறிவித்துள்ளார்.**

1. அருட்பணி. க. அ. அருள்ராஜ் குரூஸ் - பரிபாலகர், பெரியகட்டு புனித அந்தோனியார் திருத்தலம், மேய்ப்புப்பணி- மெனிக்பாம், பீடியாபாம், மென்டிஸ்பாம்.
2. அருட்பணி. அ. கிறிஸ்ரி றூபன் பறுனாந்து - இயக்குனர், மடு தியான இல்லம்.
3. அருட்பணி. சூ. மில்ரன் தேவராஜா – பங்குத்தந்தை, உயிலங்குளம்.
4. அருட்பணி. செ. அன்ரன் தவராஜா – பொறுப்பாளர், மூத்த குருக்கள் ஓய்வகம், பட்டித்தோட்டம்.
5. மறைக்கோட்டம் ரீதியிலான அன்பிய ஆணைக்குழு இணைப்பாளர்கள்.
   அருட்பணி. ஜொலிமன் - மன்னார்.
   அருட்பணி. பா. றொசான் - முருங்கன்
   அருட்பணி. பே. சாள்ஸ் தயாளன் கூஞ்ஞ - மடு
   அருட்பணி. மரிய கிளைன் வி.ச - வவுனியா

## துறவற வாழ்வில் நித்திய அர்ப்பணம்



கடந்த 17.12.2020 அன்று அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சேர்ந்த நான்கு சகோதரிகள் தமது துறவற வாழ்வின் இறுதி வார்த்தைப்பாட்டை நீர்கொழும்பிலுள்ள புனித மரியாள் ஆலயத்தில் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட் கலாநிதி. அன்ரனி ஜெயக்கொடி ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியில் அச்சபையின் மாகாண தலைவி அருட்சகோதரி. மாறி லுவட்ஸ் அவர்களின் முன்னிலையில் பெற்றுக்கொண்டனர்.

மன்னார் மறைமாவட்டத்தின் முத்தரிப்புத்துறை பங்கைச் சேர்ந்த (அருட்பணி. செல்வநாதன் பீரிஸ் அடிகளாரின் சகோதரி) அருட்சகோதரி. கிறேஸ்லின், சிறுக்கண்டல்பங்கு பிச்சைகுளத்தைச் சேர்ந்த அருட்சகோதரி. நொயலின், சிறுக்கண்டல்பங்கு களிமோட்டையைச் சேர்ந்த அருட்சகோதரி. புஸ்பமலர், மாக்கோளையைச் சேர்ந்த அருட் சகோதரி. றன்மாலி ஆகியோரே தமது இறுதி வார்த்தைப்பாட்டைப் பெற்றுக்கொண்டனர்.

இத் திருச்சடங்குத் திருப்பலியில் அருட்பணி. இராயப்பு, அருட்பணி. செல்வநாதான் பீரிஸ் ஆகியோரும் இணைந்து ஒப்புக்கொடுத்தார்கள். சகோதரிகளுக்கு மன்னார் மறை மாவட்டம் சார்பாக வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.●

## விடத்தல்தீவுபங்கு

### புனித யாகப்பர் ஆலய அபிஷேக விழா



விடத்தல்தீவு பங்கில் புனித யாகப்பர் ஆலய அபிஷேக விழாவானது கடந்த 20.12.2020 அன்று மாலை 4.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட மேதகு ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் போது மடு மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. சத்தியராஜ், ஆயரின் செயலர் அருட்பணி. நீக்கிலஸ், யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம், முன்னைநாள் பங்குத்தந்தையர்கள் ஆகியோரும் பிரசன்னமாகி இருந்தனர்.

விடத்தல்தீவு பங்குத்தந்தை அருட்பணி. அருட்குமரன் அடிகளார் அவ் ஆலயத்தைச் சேர்ந்த இறைமக்களோடு இந் நிகழ்வை சிறப்பாக ஒழுங்குபடுத்தி இருந்தார்.●

## உண்மை உறைக்கும்



## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# உறுதிப்பூசுதல் கொண்டாட்ட நிகழ்வுகள்

**தரணிக்குளம்பங்கு – 28.11.2020**



தரணிக்குளம்பங்கு புனித யோசேவ்வாஸ் ஆலயத்தில் கடந்த 28.11.2020 அன்று காலை 8.00 மணிக்கு 40 மணவ மாணவிகளுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தை வழங்கினார். ➡ 14

**பண்டிவிரிச்சான்பங்கு – 23.11.2020**



மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் பண்டிவிரிச்சான் பங்கு புனித மரிய கொறற்றி ஆலயத்தைச் சேர்ந்த 59 பிள்ளைகளுக்கு கடந்த 23.11.2020 அன்று காலை 7.00 மணிக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனத்தை வழங்கி வைத்தார். இத் திருப்பலிக்கான ஆயத்தங்களை பண்டிவிரிச்சான் பங்குத்தந்தை அருட்பணி. ரெறன்ஸ் கலிஸ்ரஸ் குலாஸ் அடிகளார் மேற்கொண்டதுடன் இத்திருப்பலியில் ஆயரின் செயலாளர் அருட்பணி. நீக்கிலஸ் அடிகளாரும் இணைந்து கொண்டார்.

**வங்காலைப்பங்கு – 02.12.2020**





கடந்த 02.12.2020 அன்று காலை 7.00 மணிக்கு வங்காலைப் பங்கு புனித ஆனாள் ஆலயத்தில் 52 மாணவ மாணவிகளுக்கு மன்னார் ஆயரினால் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இத்திருநிகழ்வில் ஆயரின் செயலாளர் அருட்பணி. நீக்கிலஸ், வங்காலை உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. றஞ்சன் சேவியர், அருட்பணி. சஜி, அருட்பணி. மொறைஸ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் இத்திருப்பலியை வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணி. மாக்கஸ் அடிகளார் ஒழுங்குபடுத்தியிருப்பதும் குறிப்பிட தக்கது.

**யோசேவ்வாஸ்நகர்பங்கு – 14.12.2020**



யோசேவ்வாஸ் நகர் பங்கில் கடந்த 14.12.2020 அன்று மன்னார் ஆயரினால் 41 பிள்ளைகளுக்கு காலை 7.00 மணியளவில் உறுதிபூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. இக் கொண்டாட்ட நிகழ்வை பங்குத்தந்தை அருட்பணி. ஆரோக்கியம் அடிகளார் சிறப்பாக ஆயத்தம் செய்ததுடன் இத்திருப்பலியில் இவருடன் ஆயரின் செயலாளர். அருட்பணி. நீக்கிலஸ் அடிகளாரும் கலந்து கொண்டார்.

## உலகத் திருஅவைச் செய்திகள்

# கிறிஸ்மஸ் குடில், மரம் நம்பிக்கையின் அடையாளங்கள்



கிறிஸ்மஸ் குடில், மரம் ஆகிய இரண்டின் சிறப்பு பற்றி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த டிசம்பர் 19 சனிக்கிழமையன்று தன் டுவிட்டர் பக்கத்தில் குறுஞ்செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதிலே ''கிறிஸ்மஸ் குடில், மரம் ஆகிய இரண்டும் எல்லாக் காலத்திலும் குறிப்பாக துன்பம் நிறைந்த காலக்கட்டத்தில் நம்பிக்கையின் அடையாளங்கள். இந்த அடையாளத்தை நிறுத்திவிடாமல் இருப்பதில் நாம் உறுதியாயிருப்போம். அத்துடன் அவற்றின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வோம். அதாவது கடவுள் நமக்கு வெளிப்படுத்திய இந்த உலகத்தில் அவர் ஒளிரச்செய்த தம் எல்லையற்ற நன்மைத்தனத்தை அவை நமக்கு வெளிப்படுத்துகின்றன'' என்ற வார்த்தைகள் இடம்பெற்றிருந்தன. மேலும் திருப்பீடத்தில் தன்னை சந்தித்த வத்திக்கானுக்கான வட மாசிதோனியா குடியரசின் புதிய தூதர் Marija Efremova மற்றும் கொண்டூராஸ் நாட்டு புதிய தூதர் Carlos Antonio Cordero ஆகிய இருவரிடமிருந்து பணிநியமன சான்றிதழ்களைப் பெற்றார்.●

# புனித சூசையப்பர் யூபிலி ஆண்டு – 2021

புனித சூசையப்பரை உலகளாவிய திருஅவையின் பாதுகாவலராக திருத்தந்தை 9ம் பத்திநாதர் அறிவித்ததன் 150 ஆண்டு நிறைவில் எம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ''Patris Corde – ஒரு தந்தையின் இதயத்துடன்'' என விழித்து தமது திருத்தூது மடலை வெளியிட்டுள்ளார். இக்காலத்தை சிறப்பிக்கும் முகமாக 8.12.2020 – 8.12.2021 வரை ''புனித சூசையப்பர் ஆண்டு'' என பிரகடனப்படுத்தி உள்ளார்.




**புனித சூசையப்பர் ஆண்டுக்கான செபம்**

மீட்பரின் பொறுப்பாளரே, புனித கன்னி மரியாளின் துணையாளரே வாழ்க! கடவுள் தனது ஒரே திருமகனை உம்மிடமே ஒப்படைத்தார். உம்மிடமே மரியாள் தமது முழு நம்பிக்கையையும் கொண்டிருந்தார். உம்முடனேயே கிறிஸ்து மனிதரானார். பேறுபெற்ற கனவின் சூசையப்பரே, எங்களுக்கும் உம்மையே ஒரு தந்தையாகக் காட்டி வாழ்வின் பாதையில் எங்களை வழிநடத்தும். அருள், இரக்கம், மன உறுதியைப் பெற்றுத்தாரும். அனைத்துத் தீமைகளிலுமிருந்தும் எங்களைப் பாதுகாத்தருளும். ஆமென்.●

# திருத்தந்தையின் கிறிஸ்மஸ் செய்தி



ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவன்று திருத்தந்தையர் வழங்கும் ''Urbi et Orbi'' சிறப்புச் செய்தியும், நிறைபெறுபலன் ஆசீரும் வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தின் மேல்மாடத்திலிருந்து வழங்கப்படும். இவ்வாண்டு கோவிட்-19 கொள்ளைநோயின் பரவலைத் தடுக்க இத்தாலிய அரசு விதித்துள்ள தடைகளை கருத்தில் கொண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாண்டின் ''Urbi et Orbi'' சிறப்புச் செய்தியையும், நிறைபெறுபலன் ஆசீரையும் வத்திக்கான் இல்லத்திலுள்ள ஆசீரின் அரங்கத்திலிருந்து வழங்கினார்.

**அன்பு சகோதர சகோதரிகளே அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!**

ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார் (எசா. 9:6). அவர் நம்மைக் காக்க வந்தார்! துன்பமும், தீமையும் இறுதியான உண்மைகள் அல்ல என்பதை அவர் நமக்குச் சொல்கின்றார். வன்முறைக்கும், அநீதிக்கும் அடிபணியும்போது கிறிஸ்மஸ் மகிழ்வையும், நம்பிக்கையையும் நாம் நிராகரிக்கின்றோம். எதிர் சக்திகள் சூழும்போது அவற்றால் தோல்வியடைய மறுப்பதோடு, நம்பிக்கையைக் கொணர்வதற்கும், துன்புறுவோருக்கு ஆறுதலும், உதவியும் வழங்குவதற்கும் உழைத்து வருவோரை இந்த திருநாள் வேளையில் சிறப்பாக நினைத்துப் பார்க்கிறேன். இயேசு ஒரு தொழுவத்தில் பிறந்தாலும் அவரை அன்னை மரியாவும், புனித யோசேப்பும் அன்புடன் அரவணைத்தனர். குடும்பத்தின் அன்பை தன் பிறப்பின் வழியே இறைமகன் புனிதமாக்கினார். இவ்வேளையில் என் எண்ணங்கள் குடும்பங்களை நோக்கி அதிலும் குறிப்பாக, குடும்பமாகக் கூடிவர இயலாமல் இல்லங்களில் தனித்திருப்போர் மீது திரும்புகின்றன. குடும்பம் வாழ்வுக்கும், நம்பிக்கைக்கும் தொட்டில் என்பதையும் அதுவே அன்பு, உரையாடல், மன்னிப்பு ஆகியவற்றின் பிறப்பிடம் என்பதையும் நாம் அனைவரும் மீண்டும் கண்டுபிடிக்க இந்த கிறிஸ்மஸ் ஒரு வாய்ப்பாக அமைவதாக.●

# இம்மாத திருவழிபாட்டு விழாக்கள்

## புனித அன்னை மரியா
### இறைவனின் தாய்




புத்தாண்டின் முதல் நாள், கிறிஸ்து பிறப்பு பெருவிழாவின் 8ஆம் நாள் திருஅவை புனித கன்னிமரி இறைவனின் தாய் என்று எழுச்சியுடன் கொண்டாடுகின்றது. 5ஆம் நூற்றாண்டில் இயேசு படைக்கப்பட்ட பொருள் மட்டுமே. மனித இயல்பு உடையவரே அவரிடம் இறை இயல்பு இல்லை எனவே மரியா இயேசுவின் தாய் மட்டுமே இறைவனின் தாய் அல்ல என்ற தவறான கொள்கையை நெஸ்தோரியஸ் வெளியிட்டார். இதனை மறுத்து கி.பி 431 இல் எபேசு நகர்ப் பொதுச்சங்கம் கூட்டப்பட்டு இம்மானுவேல் உண்மையிலேயே கடவுள் என்றும், கன்னிமரி இறைவனின் தாய் என்றும் வரையறுத்துக் கூறப்பட்டது.

இது விசுவாச சத்தியமாக வரையறுக்கப்பட்டவுடன் மரியன்னையின் அன்பர்கள் ஆர்ப்பரிப்புப் பேரொலி எழுப்பினர். இந்த முடிவு எடுக்கப்பட்ட நேரம் இரவு எனவே ஆயர்கள் தீப்பந்தங்கள், மேளதாளங்களுடன் தம் இல்லங்களுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். பொதுச்சங்கத்தில் ஆயர் சிரில் தான் நெஸ்தோரியசின் தவறை சுட்டிக்காட்டி மரியா இறைவனின் தாய் என பறைசாற்றினார். 1953 இல் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் Fulgens Corona என்ற தம் சுற்றுமடலில் மரியா இறைவனின் தாய் என்பதால் மட்டுமே இறைவன் இவரை எல்லாவிதமான வரங்களாலும், ஆசீராலும் அணிசெய்ய திருவுளமானார் எனக் கூறுகின்றார்.

2ஆம் வத்திக்கான் சங்கம் "திருச்சபை" என்னும் தலைப்பில் மரியன்னை பற்றிக் கூறும்போது 12 தடவை "இறைவனின் தாய்" என்று கூறுகின்றது. "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?" என்ற எலிசபேத்துடைய வாழ்த்தும் இதனை உறுதிப்படுத்துகின்றது. 1931ஆம் ஆண்டு இவ்விழா திருஅவையின் அங்கீகரிக்கப் பட்ட விழாவாக மாறியது. 1974ஆம் ஆண்டு திருத்தந்தை 6ஆம் பவுல் இவ்விழாவை திருஅவை முழுவதும் ஆண்டின் முதல் நாள் கொண்டாடப் பணித்தார். தாய் மரியா இறைவாக்கை மனிதராக்கினார், இறைவார்த்தையை வாழ்வாக்கினார், நமக்கெல்லாம் தாயாகினார். இத்திருநாளின் வழியாக திருஅவை நம் ஒவ்வொருவரையும் விண்ணகத்தாயின் பாதுகாப்பு என்னும் போர்வையில் வைத்திருக்கின்றது.●

## புனித செபஸ்ரியார்
### படைவீரர்களின் பாதுகாவலர்




பிரான்ஸ் நாட்டில் நார்போன் நகரில் 257ஆம் ஆண்டு பிறந்தவர் செபஸ்ரியார். இவரது பெற்றோர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவராகையால் இவர் இத்தாலியில் மிலான் நகரில் வளர்க்கப்பட்டார். கிறிஸ்தவர்கள் என்று தெரிந்தாலே கொல்லப்படும் சூழ்நிலையிலும் தன்னை ஒரு கிறிஸ்துவின் பற்றாளராக வளர்த்துக்கொண்டார். உரோமை பேரரசனுக்கு அஞ்சி வாழுகின்ற கிறிஸ்தவர்களுக்கு உதவும் நோக்கோடு உரோமைப் பேரரசன் கார்னூசின் படையில் இணைந்தார். தன் திறமையால் படைத்தளபதியும் ஆனார். தன்னால் இயன்றவரை வீரர்களின் வீடுகளை சந்தித்து அவர்களுக்கு உதவினார். இவரின் நல்லுள்ளம் கண்ட பலர் கிறிஸ்தவர்களானார்கள். பேரரசன் டயக்கிளேசியனின் படையிலும் தளபதியாக பணிசெய்தார். ஒருமுறை அண்டை நாட்டு எதிரியிடமிருந்து அரசனைக் காப்பாற்றியதால் தலைமைத் தளபதியாக உயர்த்தப்பட்டார். இதனால் அரண்மனை, சிறைச்சாலைக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. எனவே அங்குள்ள கிறிஸ்தவர்களை சந்தித்து நம்பிக்கை வார்த்தைகளால் திடப்படுத்தினார். உரோமை உயர் அதிகாரி நிக்கோஸ்திராத்தின் மனைவி நோயுற்று வைத்தியர்களால் கைவிடப்பட்ட நிலையில் இருந்தபோது அதிகாரி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதாக கூறி செபஸ்ரியாரை வீட்டுக்கு அழைத்தார். புனித செபஸ்ரியார் இறைவனிடம் செபித்து அவரை குணப்படுத்தினார். எனவே அதிகாரியும் அவருடன் இருந்தவர்களும் கிறிஸ்தவர்களானார்கள். இவ்வாறு செபஸ்ரியாரினால் பலர் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். புனித செபஸ்ரியார் கிறிஸ்தவர் என அறிந்து கொண்ட அரசன் அவர் நண்பன் பங்கிராசோடு கைதுசெய்து மர்மதீன் எனும் இடத்தில் சிறைவைத்தான். பேரரசன் டயக்கிளேசியன் விசாரணை முடிவில் புனித செபஸ்ரியாரை கட்டிவைத்து அம்பு எய்யுமாறு கட்டளையிட்டான். புனித செபஸ்ரியார் மீது அம்பு எய்யப்பட்டது. இவர் இறந்து விட்டார் என எண்ணி அவர்கள் அப்படியே அவரை விட்டு விட்டு சென்றனர். புனித செபஸ்ரியாரின் சீடர்கள் வந்து பார்த்தபோது உயிர் இருந்தது எனவே மருந்திட்டார்கள். உயிர் தப்பிய செபஸ்ரியார் ஒருமுறை மாக்சிமியனை சந்தித்தார். மாக்சிமியன் அவரைத்தாக்கி அவர் மீது பாரமான கல்லைக்கட்டி சாக்கடையில் வீச ஆணையிட்டான். 288 ஜனவரி 20 புனித செபஸ்ரியார் இறைபதம் அடைந்தார்.

## புனித யோசேவ்வாஸ்
### இலங்கையின் திருத்தூதர்

**அடிகளாரின் வாழ்க்கைச் சுருக்கம்**

இலங்கையின் திருத்தூதர் எனப்படும் அருட்பணி. யோசேவ்வாஸ் அடிகள் 1651ஆம் ஆண்டு சித்திரை 21ஆம் திகதி இந்தியாவில் கோவையிலுள்ள ஒரு உயர்ந்த கொன்கானி பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை கிறிஸ்டோபர் வாஸ், தாய் மரிய தே மிராண்டா ஆவர். யோசேவ்வாஸ் அடிகள் தமது சிறு வயதிலிருந்தே கூர்மையான அறிவும் தேவ பக்தியும் மிகுந்தவர். சிறுவனாக தம் ஆரம்பக்கல்வியை பாடசலையில் கற்றபின்




வாழ்வை இறைபணிக்கென அர்ப்பணிக்க விரும்பி ஒரு குருவாகும் நோக்குடன் கோவையிலுள்ள புனித தோமஸ் அக்குவைனஸ் குருமடத்தில் இணைந்து தத்துவ இறையியல் கல்விகளை மேற் கொண்டார். 1676இல் குருவாக திருநிலைப்படுத்தப் பட்டார். 5ஆண்டுகள் கோவையிலும், 3 ஆண்டுகள் கனராவிலும் பணிபுரிந்தார். இலங்கையில் பணி புரிந்தவேளை 1692இல் கண்டியில் போர்த்துக்கேய ஒற்றன் என சிறைப்பிடிக்கப்பட்டார். பின் விடுதலை செய்யப்பட்டார். 1698-1710 வரை இலங்கை முழுவதும் ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் சமூக மையங்களை அமைத்தார். 1711இல் கண்டியில் மரித்து அடக்கம் செய்யப்பட்டார். 1995 தை 10 திருத்தந்தை யோவான் பவுலால் இலங்கையில் அருளாளர் நிலைக்கு உயர்த்தப் பட்டார். 2015 தை 14 திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் இலங்கையில் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

**அடிகளாரின் இலங்கை வருகை**

ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் இலங்கை மக்களுக்கு பணிபுரிய குருக்கள் எவரும் இருக்க வில்லை. எனவே ஆயன் இல்லா ஆடுகள் போல் இருந்த மக்களுக்கு பணிபுரிய 1687இல் தம் வேலைக்காரனான யோணை அழைத்துக்கொண்டு கூலியாள் வேடம் பூண்டு இலங்கை பயணத்தை தொடங்கினார். கடல் வழியாக யாழ்ப்பாணம் செல்ல தீர்மானித்தார். ஆனால் வள்ளம் புயலில் சிக்கி அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு மன்னாரில் கரை ஒதுங்கியது. இறைவனின் துணை யோடும் அன்னை மரியின் பாதுகாவலோடும் தாம் வந்திறங்கிய மன்னார் சவுத்பார் கடற்கரையில் ஒரு சிலுவையை நாட்டி தம் பணியை ஆரம்பித்தார். கூலியாள், பிச்சைக்காரன் வேடம்பூண்டு யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மாதோட்டம், வன்னிப்பகுதி, கண்டி, புத்தளம், சிலாபம் என பல இடங்களில் பணிபுரிந்தார்.

**மன்னார் மாதோட்ட பகுதிகளில் அடிகளாரின் பணிகள்**

மன்னாரில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் சென்று பணியாற்றிய புனித யோசேவ்வாஸ் அடிகள் வன்னிப்பகுதிக்குள் நுழைந்தார். அங்கே மடுப்பகுதியில் மாந்தை மாதாவை மறைத்து வைத்து பாதுகாத்து வந்த மக்களை கண்ட அடிகளார் அங்கு ஆன்மீக வழிகாட்டலை மேற் கொண்டு அவர்களை மேலும் விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். திருவருட்சாதனங்களையும் நிறைவேற்றினார். மேலும் கோவையிலிருந்து குருக்களை வரவழைத்து மாதோட்ட பங்கிற்கு பொறுப்பாக நியமித்தார். அக்காலத்திலிருந்தே மடுக்கோவில் பிரதான யாத்திரைஸ்தலமாக விளங்குகின்றது. புனித யோசேவ்வாஸ் அடிகள் இலங்கையில் மாதோட்ட பகுதிகளிலேயே அதிகம் பணிபுரிந்துள்ளார். இதில் பறப்பாங்கண்டல் பெரிய கோவிலானது ஒறத்தோரியன் குருக்களின் பணித் தளமாக காணப்பட்டது. புனித யோசேவ்வாஸ் அடிகள் இங்கு தங்கியிருந்து ஏனைய பகுதிகளில் பணி செய்தமை இதன் சிறப்பம்சமாகும். அடிகளார் இங்கிருந்து ஏனைய கிராமங்களுக்கு சென்று மக்களை தரிசித்து விசுவாசத்தில் உறுதிப்படுத்தி உள்ளார். இவ்வாலயமானது இற்றைவரை புனிதரின் மகத்துவத்தை கூறுகின்றது. அடிகளார் மாதோட்டப் பகுதியில் பணிபுரிந்தவேளை பெரியமுறிப்பில் கள்ளிக்குளம் என்னும் கிராமத்தில் நாட்டிய சிலுவையானது புதுமை மிக்கதாக காணப்படுகின்றது. அச்சிலுவையின் சிறுபகுதியை உரஞ்சி அதை நீரில் கரைத்து குடித்த நோயாளிகள் குணமடைந்தனர். எனவே அச்சிலுவை மக்களால் இன்றுவரை பாதுகாக்கப் பட்டு வருகின்றது. மேலும் வஞ்சியங்குளத்தில் புனித பேதுரு ஆலயத்தில் உள்ள சிலுவையின் முன் முழந்தாலிட்டு செபித்தால் எம் வேண்டுதல்கள் நிறைவேறும் என மக்கள் தம் அனுபவத்தை பகிர்ந்துள்ளதோடு அடிகள் நாட்டிய அச்சிலுவையை பாதுகாத்தும் வருகின்றனர்.

அத்தோடு நானாட்டான், ஆத்திக்குழி ஆகிய பகுதிகளிலும் புனித யோசேவ்வாஸ் அடிகளார் வந்து சென்றமைக்கான ஆதாரங்கள் காணப் படுகின்றன. இதேபோல் முத்தரிப்புத்துறையில் பொற்கேணிக்கு போகும் வழியில் அடிகளாரால் நாட்டப்பட்ட சிலுவையின் அடியில் செபித்த போது பேச்சற்ற சிறுவன் பேசத் தொடங்கியதாக அதன் புதுமையை அப்பிரதேச மக்கள் கூறுகின்றனர். மேலும் பெரியகரிசல், தலைமன்னார், செட்டிகுளம், முசல்குத்தி, கிறிஸ்தவகுளம், பெரியட்டு, வவுனியா ஆகிய இடங்களில் அடிகளாரால் நாட்டப்பட்ட சிலுவைகளானது இன்றுவரை மக்களால் பாதுகாக்கப்பட்டு, விசுவசிக்கப்பட்டு வருகின்றது. அடிகளாரின் பணி மாதோட்டப் பகுதிகளில் பெரும் பங்காற்றியது என்பதில் ஐயமில்லை. எனவே அடிகளார் பணி ஆற்றிய பிரதேசத்தில் உள்ள மக்கள் அடிகளாரின் நினைவாக ஆலயங்கள், பாடசாலைகள், கிராமங்களுக்கு அடிகளாரின் பெயரினை சூட்டி அவர் மகத்துவத்திற்கு சாட்சியம் பகர்ந்து வருகின்றனர்.●

## திருப்பாலத்துவ சபை தினம்
## 17.01.2021

### இயேசுவின் திருப்பாலர்கள்

என்னிடம் வரவிடுங்கள் சிறுவர்களை
தடுக்காதீர்கள் அப்பிஞ்சுப் பாலகர்களை
இறையரசின் உரிமையும் இவர்களுக்கே
இறைவாக்கினராகும் உரிமையும் இவர்களுக்கே

வல்லமை உடைய மீட்பர்கள்
வாழும் கடவுளின் புதல்வர்கள்
துன்பத்தை ஏற்கும் மனிதர்கள்
நற்செயல்களால் உயர்ந்த புனிதர்கள்

நாளைய உலகின் பிரஜைகள்
இறைதிருவுளத்தை ஏற்கும் அடிமைகள்
என்றும் நறுமணம்வீசும் புஷ்பங்கள்
இறைவனை பிரதிபலிக்கும் கண்ணாடிகள்

இறைநம்பிக்கையில் நிலைகொண்ட தூண்கள்
இறைவார்த்தையை வாழ்வாக்கும் கோன்கள்
கத்தோலிக்கத் திருமறையின் கோல்கள்
சிறுவர்களே இவ்வுலகின் மாமனிதர்கள் !



ஜெ. அபிஷானி - குழந்தை இயேசுபுரம்

## இம்மாத திருவழிபாட்டு விழாக்கள்

# புனித அக்னஸ்

### திருமண நிச்சயமானவர்களின் பாதுகாவலி



21.01.2021

கன்னியாக உரோமையில் மறைசாட்சி முடி பெற்றவர்களுள் அக்னஸ் அதிமுக்கியத்துவம் பெற்றவர். பூரண சந்திர அழகும் பொலிவும் கொண்ட அக்னஸ் 291ம் ஆண்டு உரோமையில் ஒரு வசதியான குடும்பத்தில் பிறந்தவர். அக்னஸ் என்றால் தூய்மை அல்லது புனிதம் என்பது பொருள். தம் பெயரின் பொருளை தன் வாழ்க்கையில் காப்பாற்றி வந்தார். தன் உடல், மனம் தன்னை முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணித்தார். கிறிஸ்தவர்கள் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்ட காலத்தில் பிறந்த புனித அக்னஸ் தன் 13வது வயதில் அவளுடன் இருந்த சிறுமி ஒருவரால் இவள் கிறிஸ்தவள் என காட்டிக்கொடுக்கப்பட்டார். இதை அறிந்த உரோமை அதிகாரிகள் கோபமடைந்தவர்களாய் புனித அக்னஸை கூட்டி வந்து உரோமைக் கடவுளின் சிலையை வணங்க கட்டளையிட்டனர். ஆனால் புனித அக்னஸ் ''என் உயிரே போனாலும் நான் இதை செய்யமாட்டேன்'' என மறுத்தாள். தம்மை திருமணம் செய்யும் படி அதிகாரிகள் கட்டாயப்படுத்தினர். ''தன் உடலும் ஆன்மாவும் என்றும் உள்ள இறைவனுக்கே'' என உறுதியுடன் கூறினாள் அக்னஸ். கோபமடைந்த அக்கொடியவர்கள் அக்னஸின் கைகளை குதிரையின் பின்னால் கட்டி உரோமை நகர வீதிகளில் இழுத்துச் சென்றனர். ஆடைகள் கிழிபட்டு அரை நிர்வாணமாக காட்சியளித்தவரை எள்ளி நகையாடினார்கள். இறுதியாக அக்னஸை ஒரு விபச்சார விடுதியில் தள்ளி அலங்கோலப்படுத்தும் காம வெறியுடன் அவரை நெருங்கினார்கள். ஆனால் அவர் அருகில் சென்றவர்கள் எல்லாம் பார்வை இழந்து குருடானார்கள். அக்னஸை தீயிட்டு சாம்பலாக்க எண்ணி கட்டைகளை அடுக்கினர். ஆனால் அவர்களால் தீ வைக்க முடியவில்லை. என்ன செய்வது என்று தெரியாது விழித்துக் கொண்டிருந்தபோது ஒரு வீரன் அக்னஸின் தலையை வெட்டி சாய்த்தான். இறைவனுக்காக தன் கன்னிமையைக் காத்த அக்னஸ் 304ஆம் ஆண்டு ஜனவரி 21 இறைபதம் அடைந்தார்.●

# புனித தோமஸ் அக்குவைனஸ்

### கல்வி நிறுவனங்களின் பாதுகாவலர்




28.01.2021

அக்குவைனஸ் லாண்டப் பிரபு மற்றும் தியோடோரா தம்பதியினருக்கு பிறந்த கடைசி மகன். இவர் பிறந்த ஆண்டு திட்டவட்டமாக தெரியாத நிலையில் 1225இல் பிறந்திருக்கலாம் என வரையறை செய்யப்படுகின்றது. பேரரசனின் நெருங்கிய தொடர்போடு இருந்தமையால் சமூகத்தில் முழு மரியாதையுடன் வாழ்ந்து வந்தார். ஐந்து வயதில் ஆசீர்வாதப்பர் மடத்தில் சேர்ந்த இவர் 11 வயதில் உயர் கல்விக்காக நேப்பிள்ஸ் சென்றார். மகன் படித்து பட்டம் பெற்று அரச சபையில் ஒளிர்வான் என காத்திருந்த தந்தைக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. நேப்பிள்ஸ் பகுதியில் புனித ஜூலியனின் மறையுரையால் கவரப்பட்ட அக்குவைனஸ் 18ஆம் வயதில் சாமிநாதர் சபையில் சேர்ந்து தவ உடை அணிந்தார். அதிகாரத்தைப் பற்றி மட்டுமே சிந்தித்தவர்களால் இதனை ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. எனவே மேற்படிப்புக்கு சென்ற மகனை வழிமறித்து பிடித்து சிறையில் மறைத்து வைத்தனர். சிறையில் இருந்தபோது தாய், சகோதரியின் உதவியோடு மெய்யியல், இறையியல் சார்ந்த நூல்களை வாசித்தார். தாயின் துணையோடு சாமிநாதர் சபைத்துறவிகள் சிலர் ஒரு கூடையில் இவரை மறைத்து அரண்மனையில் இருந்து காப்பாற்றினர். இவரின் ஞானத்தையும் அறிவையும் கண்டு மடத்திலுள்ளவர்கள் வியந்தனர்.

குருவாக திருநிலைப்படுத்தப்பட்டவராய் பாரிஸ், நேப்பிள்ஸ் மற்றும் உரோமையில் ஆசிரியப்பணி புரிந்தார். திருத்தந்தை 6ஆம் அர்பனின் ஆட்சி மன்றத்தில் 1261 – 1264இல் பணியாற்றினார். நற்கருணை வழிபாட்டுக்கு தேவையான திருப்பலி, மாலை ஆராதனை, பாடல்களை எழுதினார். வாழ்ந்த 49 வருடத்தில் 60 புத்தகங்களை எழுதினார். அதில் ''இறையியல் சுருக்கம்'', ''வேற்றினத்தாரின் கொள்கை மறுப்பு'' போன்றன முக்கியமானவை. 1274 மார்ச் 7ஆம் திகதி இறைபதம் அடைந்தார். 1323 ஜூலை 18 அன்று திருத்தந்தை 22ஆம் யோவானால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். 1567 ஏப்ரல் 14 அன்று திருத்தந்தை 5ஆம் பத்திநாதர் இவரை ''திருச் சபையின் மறைவல்லுனர்'' என அறிவித்தார்.●

# புனித பிரான்சிஸ் டி சேல்ஸ்

### செய்தியாளர்களினதும் எழுத்தாளர்களினதும் பாதுகாவலர்



24.01.2021

1567 ஆகஸ்ட் 21 பிரான்ஸ் நாட்டில் புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் பிறந்தார். இயல்பிலேயே பொறுமைசாலியான இவர் குருவாக பணியாற்ற அழைப்பு இருப்பதை உணர்ந்தும் 13 ஆண்டுகள் யாரிடமும் சொல்லவில்லை. போர் வீரனாக வேண்டும், பட்டப்படிப்புக்கு செல்ல வேண்டும் என தந்தை கூறிய போது மறுப்புக் கூறாமல் இருந்தார். ஏனெனில் தமது விருப்பம் என்பதை விட எப்போது அழைத்தலை நான் ஏற்கவேண்டும் என கடவுள் எண்ணுகிறாரோ அப்போது தான் செல்ல வேண்டும் என நினைத்தார். குதிரை ஓட்டுவதில் தேர்ச்சி பெற்றிருந்த இவர் மும்முறை கீழே விழுந்தார். அப்போது தன் வாளும் அதன் உறையும் சிலுவை வடிவில் கிடைப்பதைக் கண்டு அதுவே இறைசித்தம் என உணர்ந்தார். வீட்டாரின் சம்மதத்தோடு குருவானார். கல்வின் சபையினர் கிறிஸ்தவர்களை தம் வசப்படுத்தி இருந்த சூழலில் அவர்களை மீண்டும் கத்தோலிக்க சபைக்கு கொண்டுவர முடிவெடுத்தார். ஆனால் மக்கள் கல்லெறிந்து விரட்டினர். தூங்க இடமின்றி வைக்கோல் மீதும், மரக்கிளை மீதும் தூங்கினார். பெரியவர்களிடம் மாற்றம் ஏற்படாததால் குழந்தைகளுடன் பேசிப்பழகினார். குழந்தைகள் மேல் இவர்காட்டிய கரிசனையை கண்டு 40,000 பேர் கத்தோலிக்க மதத்திற்கு திரும்பி வந்தனர். 1602இல் ஜெனிவா ஆயராக பொறுப்பேற்றார். ''புனிதம் என்பது துறவு வாழ்வு மேற் கொண்டவர்களுக்குத்தான் என்றிருந்த நிலையை மாற்றி அது சாமானியருக்கும் உரியது'' என்பதை தமது புனித வாழ்விற்கான முன்னுரை என்னும் நூலில் அழுத்தமாக பதிவு செய்தார். ''உமது பார்வையை தியானத்தின் வழியாக கடவுள் பக்கம் திருப்பினால் உமது முழு ஆன்மாவிலும் கடவுள் நிறைந்து இருப்பார். அனைத்து செயற்பாடுகளையும் கடவுளின் பிரசன்னத்தில் இருந்தே ஆரம்பி'' என்று மொழிந்த பிரான்சிஸ் தன் அருகில் இருந்த அருட்சகோதரியிடம் ''தாழ்ச்சி'' எனும் வார்த்தையை கடைசியாக சொல்லிவிட்டு 1622 டிசம்பர் 28 அன்று உயிர் நீத்தார். 1661 ஜனவரி 8 அருளாளர் நிலைக்கும், 1665 ஏப்ரல் 8 புனிதர் நிலைக்கும் திருத்தந்தை 7ஆம் அலெக்ஸாண்டர் உயர்த்தினர். 1877 நவம்பர் 16 மறைவல்லுனர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.●

# புனித டொன் பொஸ்கோ

### இளையோரின் பாதுகாவலர்



31.01.2021

இவர் 1815 ஒகஸ்ட் 16 இத்தாலி நாட்டில் பெச்சி என்ற இடத்தில் பிறந்தார். இவரது பெற்றோர். பிரான்சிஸ் பொஸ்கோ, மார்க்கிரேட் ஒச்சி. ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த பொஸ்கோ சிறுவயதிலேயே தந்தையை இழந்தார். சிறு வயதிலிருந்தே நன்கு படித்து குருவானவராகப் பணியாற்ற வேண்டும் என்ற ஆவல் இருந்தது. ஆனால் அதற்கான வசதி இருக்கவில்லை. இதை அறிந்த ஒரு குரு பொஸ்கோவை ஊக்கப்படுத்தினார். பலரின் உதவியோடும் தாயின் உந்துதலோடும் படிக்க ஆரம்பித்த டொன் பொஸ்கோ 1835இல் குருமடத்தில் சேர்ந்தார். 6 ஆண்டுகளின்பின் 1841இல் குருவாக திரு நிலைப்படுத்தப் பட்டார். ட்யூரின் நகரில் பணி புரிந்த டொன்பொஸ்கோ சிறைச்சாலை சென்று அங்குள்ள இளைஞர்களை சந்தித்தார். இளம் வயதில் சிறையில் உள்ளவர்களை எண்ணி கவலையுற்றார். வீதியோரத்திலுள்ள சிறுவர்களையும், இளைஞர்களையும் அழைத்து வந்து நன்னெறிப்படுத்தினார். இவரது அன்புக்கு அடிமையாகிய பலர் திருந்தினர். இவர்களுக்கு பாடம் நடத்த பலர் உதவினர். இந்நிலையில் அருட்பணி. டொன் பொஸ்கோ ரிபுஜியோக்கு சென்றார். அங்கு டோன்போரெல் என்ற ஆர்வலருடன் இணைந்து பேராயரின் அனுமதியுடன் புனித பிரான்சிஸ் சவேரியார் இல்லம் ஒன்றை ஆரம்பித்து மாணவர்களுக்கு கல்வி வழங்கினார். பிறகு மற்றுமோர் இடத்திற்கு தமது இல்லத்தை மாற்றினார். எந்த வசதியுமற்ற அந்த இடத்தில் 700 மாணவர்கள் இருந்தனர். இந்நிலையில் இவரது தாய் அவருக்கு உதவிட முன்வந்தார். தமது கடைசி 10 ஆண்டுகள் மகனுடன் இருந்து உதவினார். தான் முன்னெடுத்த பணிகளை தொடர்ந்து ஆற்ற ஆண்களுக்கு சலேசிய சபையையும், பெண்களுக்கு கிறிஸ்தவர்களின் சகாய மரியின் புதல்வியர் சபையையும் தோற்றுவித்தார். 1888 ஜனவரி 31இல் இறந்தார். திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் 1929 ஜீன் 2 இவரை அருளாளராக அறிவித்தார். 1934 ஏப்ரல் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.●

# சவுல் பவுல் ஆனார்! புனித பவுல் மனமாற்ற விழா – 25.01.2020

அருட்பணி. கிறிஸ்து நேசரெட்ணம், – நெருடல்கள் நூல்

வெண்ணிறக் குதிரை ஒன்றில்
செந்நிற விழிகள் கொண்டு
பறந்து சென்றான் சவுல் - தன்னை
மறந்து விரைந்தான் வீதியில்

மின்னலென ஒளிவெள்ளம் பாய்ந்தது
இன்னலொன்று நேர்ந்ததை உணர்ந்தான்
குதிரை நிலைகுலைந்து மருண்டது
சவுலின் கண்கள் இருண்டது
கண்களில் கண்ணீர் திரண்டது

''சவுலே சவுலே'' என்ற
சத்தத்தைக் கேட்டுத் துணுக்குற்றான்
''யார் நீர்?'' என்றான் சவுல்
''நீ துன்புறுத்தும் இயேசுதான் நான்'' என்றது குரல்

தடுமாறிய அவன் வாழ்வு அப்போது தடம் மாறியது
சவுல் பவுல் ஆனார்!
இங்கே விடைகாணா வினாவொன்று!
சவுல் இயேசுவைத் தேர்ந்துகொண்டாரா?
அல்லது இயேசு சவுலைத் தேர்ந்துகொண்டாரா?



## அன்பிய யூபிலி ஆண்டுக் கட்டுரை

# திருவழிபாடும் நமது அன்பியமும்

**1. அன்பியத்தில் திருவழிபாடு**

திருவழிபாடு, திருஅவையின் செயல் முழுவதுமே நாடி நிற்கும் சிகரமாக அமைந்துள்ளது. அத்துடன் திரு அவையின் ஆற்றல் அனைத்திற்கும் அது ஓர் ஊற்றாகவும் உள்ளது. (திவ 10). மேலும் திருவழிபாட்டில் மிகச் சிறப்பாகத் தூய்மைமிகு நற்கருணைப் பலியில், கிறிஸ்துவின் உடனிருப்பு வழியாகவும், கிறிஸ்துவின் திருஅவையின் திருப்பணிகள் வழியாகவும் [redacted]நமது மீட்பு அலுவல் நடந்தேறுகின்றது[redacted](திவ 7,2) திருப்பலிக் கொண்டாட்டம் கிறிஸ்துவும், திருஆட்சி முறைப்படி அமைந்த இறைமக்களும் சேர்ந்து ஆற்றும் செயல் ஆகும். எனவே அது அனைத்துலகத் திருஅவையினுடையதும், தலத் திருஅவையினுடையதும், நம்பிக்கையாளர் ஒவ்வொரு வருடையதும் முழுமையான கிறிஸ்தவ வாழ்வின் மையம் ஆகும் (திவ 41, தி 11). ஏனெனில் திருப்பலிக் கொண்டாட்டத்தில் தான் கடவுள் கிறிஸ்துவில் உலகைப் புனிதப்படுத்தும் செயலின் சிகரம் அமைந்துள்ளது. இதில் தான் மக்கள் கிறிஸ்து வழியாகத் தூய ஆவியாரில் தந்தைக்குச் செலுத்தும் வழிபாடு நடைபெறுகின்றது. (திவ 10).

எல்லா புனிதச் செயல்களும், கிறிஸ்தவ வாழ்வின் செயல்பாடுகளும் திருப்பலியோடு இணைந்து, அதிலிருந்து தொடங்கி அதை நோக்கியே நாடி நிற்கின்றன. உண்மையில் திருஅவையின் அருள்வளம் முழுவதும் தூய்மைமிகு நற்கருணையில் அடங்கியிருக்கின்றது. (தி.ப 5). எனவே திருப்பணியாளர்களும் நம்பிக்கையாளரும் தத்தம் நிலை களுக்கேற்ப திருப்பலியில் பங்கேற்று அதன் பயன்களை நிறைவாகப் பெறுவது மிகவும் அவசியம் (திவ 26). இவற்றை அடைவதற்காக ஆண்டவராகிய கிறிஸ்து தம் உடலாலும் இரத்தத்தாலும் நற்கருணைப் பலியை நிறுவி, அதை தம் பாடுகள் இறப்பு உயிர்ப்பு ஆகியவற்றின் நினைவுச் சின்னமாகத் தம் அன்பு மணமகளாம் திரு அவையிடம் ஒப்படைத்தார். (திவ 47)

இதன் பயனாக நம்பிக்கையாளர் பொருள் உணர்ந்தும் செயல்முறையிலும் முழுமையாகவும் பங்கு கொள்வதற்குத் தூண்டப்பட வேண்டும். அதாவது அவர்கள் ஆர்வமிக்க நம்பிக்கையுடனும், எதிர்நோக்குடனும், அன்புடனும், உள்ளத்தாலும், உடலாலும், செயல்முறைகளாலும் முழுமையாக இக்கொண்டாட்டத்தில் பங்கு கொள்வதைத் திருஅவை மிகவே விரும்புகின்றது. இது கொண்டாட்டத்தின் இயல்புக்கே இன்றியமையாதது. இது திருமுழுக்கினால் கிறிஸ்தவ மக்களின் உரிமையும் கடமையும் ஆகின்றது. (திவ 14). இவ்வாறு திருமுழுக்குப் பெற்ற அனைவரும் முழுமையாகவும், ஈடுபாட்டோடும் திருவழிபாட்டில் பங்கேற்க மிகவும் அடித்தளமாக இருப்பது அன்பியமாகும்.

**2. அன்பிய வழிபாடு ஓர் அனுபவ வழிபாடு - தனி வழிபாடு**

திரு அவை என்பது மக்கள் சமூகமாக சேர்ந்து ஒன்றாக கூடி வருதலாகும். உறவில்லாத சமூகம் திருஅவை கிடையாது. உறவுச் சமூகங்களைக் கட்டியெழுப்பியது அடிப் படை அன்பியங்களாகும். திருஅவையிலும் சமூகத்திலும் மாற்றம் வர முடியும். இத்தகைய அடிப்படை மாற்றுச் செயல் பாடுகளுக்கு ஊற்றாக இருப்பது வாழ்வோடு இணைந்த வழிபாடுகள். இவற்றை குழு வழிபாடாகவோ, தனி வழிபாடாகவோ கொண்டாடுவதற்கு அன்பிய வழிபாடுகள் உதவி புரிகின்றன.

**3. புதிய வழிபாடு**

பொது நலனை மனதில் கொண்டு பொது இடத்தில் கூடி சமூக, சமய, பொருளாதார, அரசியல் நிலைகளை இறைவார்த்தையின் அடிப்படையில் ஆராய்ந்து திட்டங்கள் தீட்டுவதே இப்புதிய வழிபாட்டின் சிறப்பு அம்சம். வாழ்க்கை, சூழல், நிகழ்வு, சிக்கல் ஆகியவற்றை விவிலியத்தின் அடிப்படையில் ஆய்ந்து தீர்மானித்து அதற்கு முடிவு காண்பதும் திருப்பலி, நற்செய்திக் கூட்டம், திருப்புகழ் மாலை, அருளடையாளங்கள், ஆசிகள் ஆகியவை அடங்கிய அனுபவங்களும் வழிபாட்டில் இடம்பெறுவதால் பொதுவான அனுபவம் கொண்ட புதிய வழிபாடாக இது மாறுகின்றது.

**4. கொண்டாடுவோம்**

நேரடியாக, மறைமுகமாக, சமூக, ஊர்ப்பிரச்சினைகள் ஆகியவை அன்பியங்களைப் பாதிக்கும் பொது அனுபவங் கள், தனி நபரின், குடும்பங்களின் அனுபவங்கள் வழிபாட்டிலும் இடம்பெறுவதால் அதைக் கொண்டாடும் போது அது வழிபாட்டில் ஒரு அனுபவமாக மாறுகின்றது.

**5. நம் வாழ்வு**

அன்பிய வழிபாடுகளில் குடும்ப உணர்வு அதிகம். இது நம்



வாழ்வு. இது ஒரு சிறிய குழுவாக இருப்பதால் எல்லோரும் நன்கு அறிமுகமானவர்களாக மாறுகின்றனர். படைப் பாற்றலே செயற்பாடுகளாக மாறுகின்றது. இந்தப் பங்கேற்பு வழிபாட்டு வாழ்வோடு இணைக்கின்றது. உறவு மேம்படுகின்றது. வழிபாட்டில் வாழ்க்கையைப் பற்றிய புரிதல் - புதிய பரிமாணங்கள், புதிய பார்வை, புதிய வாழ்வு ஆகியவை கிடைக்கின்றன.

**6. பொது வழிபாட்டில் அன்பியம்**

ஒவ்வொரு அன்பியத்திலிருந்தும் வழிபாட்டில் ஆர்வமும் பக்தியுமுள்ள நபர் ஒருவர் அல்லது இருவர் அன்பியத்தில் இருந்து திருவழிபாட்டிற்கு பொறுப்பாக தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். பங்கு ஆலயத்தில் நடைபெற இருக்கின்ற திருவழிபாட்டு நிகழ்வுகளை அன்பியத்திலிருந்து பங்கிற்கும் பங்கிலிருந்து அன்பியத்திற்கும் பரிமாறுவது அவர்களது கடமையாகும். அவர்கள் முன்னுரை, வாசகம், மன்றாட்டுக்கள் போன்ற தயாரிப்புக்களில் முன்னின்று நடத்து கின்றார்கள். இவ்வாறு,

- பொருளுள்ள விதத்தில் அன்பிய வழிபாடுகள், பங்கு வழிபாடுகளுக்கு உதவுகின்றன.
- பொது வழிபாட்டில் அவை கலத்தலாக மாறுகின்றன.
- மக்களின் பங்கேற்பு அதிகரிக்கின்றது.
- அன்பிய வழிபாடு ஓர் பொது வழிபாடாக மாறுகின்றது.

**7. அன்பியத்தில் திருவழிபாடு ஒரு மக்கள் கொண்டாட்டம் - தயாரிப்பு அவசியம்**

திருஅவை என்பது இறைமக்களின் சமூகம் திருவழிபாட்டுச் செயல்கள் தனி நபரின் செயல்களன்று. அவை திருஅவை என்ற சமூகத்தின் கொண்டாட்டங்கள்[redacted](திவ 26)

திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் திருப்பணியாளராய் இருந்தாலும் சரி, நம்பிக்கைக் கொண்டோராய் இருந்தாலும் சரி தத்தமக்குரியதை நிறைவேற்ற வேண்டும்[redacted](திவ 28) [redacted]நம்பிக்கை கொண்டோர் தொடர்பற்றவர்கள் போல இருக்காமல் சடங்குகள், இறைவேண்டல்களை நன்றாகப் புரிந்துகொண்டு, உணர்ந்து திருவழிபாட்டுக் கொண்டாட் டத்தில் பங்குபெற வேண்டும். (திவ 48). ஆகவே [redacted]மக்களின் ஆர்ப்பரிப்பு உரைகள், பதிலுரைகள், திருப்பாடல்கள், பல்லவிகள், கீதங்கள் ஆகியவை பொருத்தமான சைகைகள் மற்றும் உடல்அமர்வு நிலைகளுடன் இருக்குமாறு ஊக்குவிக்க வேண்டும்[redacted](திவ 30).

**8. அன்பியத்தில் வாசகர் மன்றம்**

இது நம்பிக்கையை எடுத்துரைக்க, பறைசாற்றத் தேவை யான ஆற்றலை அளிக்கின்றது. கிறிஸ்துவை உலகத்திற்குப் பறைசாற்றத் தேவையான அவர்களை ஆற்றலை வியத்தகு வகையில் உறுதிப்படுத்துகின்றது. (திவ 2). எனவே [redacted]தேவையான பயிற்சி அளிப்பதன் மூலம் மக்கள் திருவழிபாட்டில் மேற்கூறிய விதத்தில் பங்குகொள்ளுமாறு அருட்பணியாளர்கள் தங்கள் அருட்பணிகள் அனைத்திலும் ஆர்வமுடன் செயற்பட வேண்டும்[redacted](திவ14).

**9. அன்பியத்தில் ஞாயிறு திருப்பலியை அர்த்தம் உள்ள வகையில் கொண்டாட தயார் செய்தல்**

அன்பிய உறுப்பினர்கள் பார்வையாளர்களாக இல்லாமல் பங்கேற்பாளர்களாக மாறி ஞாயிறு திருப்பலியை அர்த்த முடன் கொண்டாட முன்னுரை, வாசகம், மன்றாட்டுக்கள், பாடல்பாடுதல் ஆகியவற்றிற்கு உதவுகின்றார்கள்.

**10. அன்பியத்தில், திருவழிபாட்டில் இளைஞர்கள்**

[redacted]இளைஞர்கள் இல்லாத சமூகத்தை நினைத்துப் பார்க்கவே முடியாது[redacted]என்கிறார் திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் போல். இது போன்றே இளைஞர்கள் இல்லாத அன்பியத் தையும் நாம் நினைத்துப் பார்க்கமுடியாது. இதனால் இளைஞர்கள் அன்பியங்களில் தவிர்க்க இயலாதவர்கள் ஆகின்றார்கள்.

**இளைஞர்கள்???**

இளைஞர்கள் பொதுவாக உணர்ச்சி வயப்படுகின்றவர்கள், வேகமாக செயல்படுபவர்கள், நீதியுணர்வு நிறைந்தவர்கள், திடீரென முடிவெடுப்பவர்கள், மாறுபவர்கள், பல வேலைகளில் எங்களுக்கும் எல்லாம் தெரியும் என்ற மன நிலை கொண்டவர்கள், கற்பனை வானில் சிறகடித்துப் பறப்பவர்கள் என்ற எண்ணங்களும் உண்டு. அவர்கள் மன நிலையை புரிந்து கொண்டு செயற்பட்டால் இளைஞர்களை அன்பியங்களில் மிகச் சிறப்பாகப் பங்கேற்கச் செய்யலாம். அன்பியங்கள் வழியாக இளைஞர்கள் திருவழிபாட்டில் பங்கேற்க பல வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறு திருப்பலி முன்னுரை, வாசகங்கள், நம்பிக்கையாளர்கள் மன்றாட்டுக்கள், காணிக்கைப் பவனி என பல வகைகள் உள்ளன. அன்பிய பகிர்வினை இளைஞர்கள் பொறுப்பேற்று நடத்தலாம். பகிர்வில் வாசகம் வாசிக்கும் நபர் போன்றோரை இவர்களே தேர்வு செய்யலாம். அன்பியத்தில் தொடக்க மன்றாட்டு, முடிவு மன்றாட்டு இவைகளை இவர்களே நடத்தலாம். இயல்பான முறையில் தங்கள் சொந்த வார்த்தைகளால் மன்றாடலாம். அன்பியப் பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டு மன்றாடும் போது, அன்பியங்களின் உள்ளங்கள் ஈர்க்கப்படுகின்றன. இதனால் அன்பியங் களுக்கும் இளைஞர்களுக்கும் இடையே நல்ல உறவுகள் உருவாகின்றன.

**11. அன்பியத்தில் பலிபீடச் சிறுவர்கள், காணிக்கை எடுக்க உதவும் பணியாளர்கள்**

அன்பியத்திலிருந்து பலிபீடச் சிறுவர்களை வழிபாட்டுக்கு அனுப்பும்போது அவர்கள் திருப்பலியில் பங்கெடுப்பதற்கும், அதன் மூலம் தேவ அழைத்தலால் தூண்டப்பெற்று குருவாக உருவாவதற்கும் அன்பியங்கள் அடித்தளமாக அமைகின்றன.

**12.அன்பியத்திலிருந்து பங்குத் திருவழிபாட்டுக் குழு உறுப்பினர்களாகும் பணி**

ஒவ்வொரு அன்பியத்திலிருந்தும் ஒருவர் அல்லது இருவர் அன்பியப் பிரதிநிதிகளாக பங்கு மன்றத்திற்கு தேர்வு செய்யப்படுகின்றபோது, ஒவ்வொரு அன்பிய குட்டித் திரு அவையும் பங்கேற்புத் திருஅவையாக மாறுகின்றது.●

---

## பள்ளிமுனை திருக்குடும்ப கன்னியர் மடத்தின்
## பவளவிழா நிறைவு வாழ்த்து (1946.01.12 – 2021.01.12)
### எங்கள் மடம்

நெய்தல் நிலமகளும் நீல வானும்
கலந்துறவாடிடும் முனையோரம்
கெந்தகச் சூளையிலும்
வெந்திடாத செவ்விழியாளின்
மங்காத மாட்சியுடன் விளங்கும் பதிதனில்
பத்து தாசாப்த பாரம்பரியங்களுடன்
பவளவிழா கொண்டாடும்
திருக் குடும்ப சபையினரின்
உறைவிடம் எங்கள் மடம்

எக்குடும்பமும் நற்குடும்பமாய் வாழ்ந்திட
உலகிற்கே எடுத்துக்காட்டான
உன்னத குடும்பத்தின் பண்புகளை
தன்னகத்தே கொண்டு நானிலம் சிறக்க
நற்பணிகளில் விளைந்த நம் சோதரிகளின்
உறைவிடம் எங்கள் மடம்

போர்டோனின் நறுமலர்கள்
எட்டுத்திக்கும் மணம் கமழ
சிற்றூராம் எம்மூரில் பந்தலிட்டு
இறைபணிக்கும் எம்மவரை இணைத்திங்கு
முப்பணிகளை செப்புடன் ஆற்றி
மூ இருபத்தைந்தில் முழு மதியாய்
திகழ்ந்தது எங்கள் மடம்

வாரும் வணங்குவோமா எனும்
வரவேற்புடன் அமைந்துள்ள சிற்றாலயமும்
ஏழ்மை கற்பு தாழ்மையுடன் வாழ்ந்த
பெத்தலகேம் திருக்குடும்பத்தின் எளிமையில்
குறைவில்லா விசுவாசத்தின் விழுமியங்களுடன்



துஞ்சாமல் நடைபயிலும் சோதரிகளின்
சேவையின் பெருமைகளை கூறும்
தங்க மடம் எங்கள் மடம்
கலங்கரை விளக்காக துலங்கும்
நின்பணி எம்பதியில் நீண்டிடவே
நித்தமும் இறையாசீர் வேண்டுகின்றோம்.

அருட்சகோதரி. கியோமார் அமலி பிகிராடோ
திருக்குடும்ப கன்னியர் சபை, கொழும்பு.

## மன்னார் மறைமாவட்டத்தின் வரலாற்றுத் தடங்கள்

# மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 40 ஆண்டுகள் நிறைவு

அருட்பணி. சேவியர் குருஸ் - முன்னைநாள் குருமுதல்வர்.

மன்னார், வவுனியா மாவட்டங்கள் முன்பு யாழ்ப்பாணம் மறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. யாழ் ஆயர் தீயோகுப்பிள்ளை ஆண்டகை எல்லாவற்றிற்கும் பொறுப்பாக இருந்து செயற்பட்டார். மன்னார் பகுதிக்கு பணிசெய்ய தேவையான குருக்களை அனுப்பிவைத்தார்.

**மன்னார் மறைமாவட்ட ஆயராக மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**

1981ம் ஆண்டு திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் மன்னார் மாவட்டத்தை ஒரு புதிய மறை மாவட்டமாக ஏற்படுத்தி அதன் முதல் ஆயராக மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களை நியமித்தார். இந் நல்ல செய்தியை மன்னார், வவுனியா மாவட்ட மக்கள் மிகவும் மகிழ்வுடன் வரவேற்றனர். 1981ம் ஆண்டு யூலை மாதம் 30ம் திகதி மடுத்திருப்பதியில் புதிய ஆயராக மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் திருநிலைப் படுத்தப்பட்டு ஆவணி 03ம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் உத்தியோக பூர்வமாக மறைமாவட்ட ஆயராக பொறுப்பேற்றார். அனைவரும் மகிழ்வுடன் இந்நிகழ்வில் பங்கேற்றனர். புதிய ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட மேதகு தோமஸ் ஆண்டகைக்கு உதவியாக 18 குருக்கள் நியமிக்கப் பட்டார்கள். மொத்தமாக 16 பங்குகள் இருந்தன.

**பங்கு தந்தையர்களின் பெயர்களும், பங்குகளும்**
**மன்னார் மறைமாவட்ட குருக்கள்:**

1. அருட்பணி. அ. சேவியர் குரூஸ் (குரு முதல்வர்- பேராலய பங்குத்தந்தை), 2.அருட்பணி. J.B.தேவராஜா (நிர்வாக பணி பொறுப்பாளர், இடம் பெயர்ந்தோர் கண்காணிப்பாளார்), 3.அருட்தந்தை. P.யேசுறாஜா (முருங்கன்), 4.அருட்பணி. A.பிலிப் (சிலாவத்துறை-அரிப்பு), 5.அருட்பணி. கிறிஸ்ரியன் வாஸ் (நானாட்டான்), 6.அருட்பணி. நோபேட் (பண்டி விரிச்சான்), 7.அருட்பணி. P.அலோசியஸ் (தலைமன்னார்), 8.அருட்பணி. கிளறன்ஸ் (அடம்பன்), 9.அருட்பணி. சூசைநாயகம் (செட்டிகுளம்), 10.அருட்பணி. சூசைப்பிள்ளை (பள்ளிமுனை)

**யாழ் மறைமாவட்டக் குருக்கள்:**

1. அருட்பணி. ஜெயசேகரம் - விடத்தல்தீவு, 2.அருட்பணி. A.P தேவசகாயம் - பேசாலை, 3.அருட்பணி. இராசநாயகம் - உயிலங்குளம், 4.அருட்பணி. மேரி பஸ்ரியன் - வங்காலை, 5.அருட்பணி. ஜெயகுமார் - பேராலய உதவி

**அமல மரித் தியாகிகள் சபைக் குருக்கள்:**

1. அருட்பணி. ஓல்பன் - வவுனியா, 2.அருட்பணி. சேப்கா ■ தாழ்வுபாடு, 3.அருட்பணி. சாள்ஸ் செந்தில்வேல் - பரிபாலகர் மடுத்திருத்தலம். தொடர்ந்து தேவையை உணர்ந்து புதிய ஆயரால் புதிய பங்குகள் ஏற்படுத்தப்பட்டு பங்குத்தந்தைகள் நியமிக்கப்பட்டனர்.

2. 1982 ஆட்காட்டிவெளி - அருட்பணி. சூசைப்பிள்ளை, ஓமந்தை, அருட்பணி. அருள் நாதன் - OMI,

3. 1991 தேவன்பிட்டி - அருட்பணி. டெஸ்மன் குலாஸ். 1983ம் ஆண்டு தை மாதம் 2ம் திகதி பழைய தோட்டவெளி ஆலயம் சீரமைக்கப்பட்டு புதிய ஆலயமாக ஆயரால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. இப்பணி பேசாலை பங்குதந்தை அருட்பணி. தேவசகாயம் அடிகளாரின் உதவியோடு செய்து முடிக்கபட்டதை நன்றியோடு நினைவுகூருகின்றோம்.

மன்னார் மறைமாவட்டம் தொடங்கியபோது மக்களை வழிநடத்திச் செல்ல ஆயர் அவர்கள் மடுத்திருப்பதியில் 1982ம் ஆண்டு மாசி மாதம் 04 - 07ம் திகதி வரைக்கும் ஓர் மேய்ப்புப் பணி மாநாடு நடாத்தினார். அருட்பணி. மேரி பஸ்ரியன் செயலாளராகவும், அருட்பணி. S.J.இம்மானுவேல் மாநாட்டை வழிநடத்த உதவியாளராகவும் பணியாற்றினர். அதில் பங்கு பிரதிநிதிகள் 213 பேர் பங்குபற்றினர். அதைத் தொடர்ந்து எடுத்த மாநாட்டின் முடிவுகள் எல்லாப் பங்குகளுக்கும் எடுத்துச்சென்று விளக்கம் அளிக்கப்பட்டு, பிரதிநிதிகள் சிறிய குழுக்களாகப் பிரிந்து செயல்பட அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மடுத்திருவிழா அமைதியாக வருடாவருடம் கொண்டாடப்பட்டு வந்தபொழுதிலும் 1983ல் இனக்கலவரம் ஏற்பட்டதால் ஊரடங்கு சட்டம் நாடெங்கும் பிறப்பிக்கப்பட்டு இருந்ததால், அந்த வருடம் மடுத்திருப்பதியில் ஆவணி திருவிழா இடம்பெறவில்லை. 1982ம் ஆண்டு ஆனிமாதம் 24ம் திகதி நீண்ட காலமாக தாழ்வுப்பாடு பங்குதந்தையாக பணியாற்றி அருட்பணி. சேப்கா அடிகளார் காலமானார். இவர் போலாந்து நாட்டை பிறப்பிடமாகக் கொண்டவர். அவருடைய ஆன்ம சாந்திக்காக மன்றாடுவோம். மன்னார் மறைமாவட்டம் ஓர் புதிய மறைமாவட்டம் என்பதால் மறைப்பரப்பு பணிக்கு மறைக்கல்வி நிலையம், சமூக பணிக்கு வாழ்வுதயம், ஆயர் இல்லம் போன்ற பணிகளை முன்னேடுத்துச் செல்ல கட்டிட வசதிகள் இருக்கவில்லை. இப் பணிகள் எல்லாம் தற்காலிகமாக பழைய பேராலயப்பங்கில் தான் இயங்கி வந்தன. இக்கட்டிட வசதிகளை ஏற்படுத்தி அப்போஸ்தலிக்கப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருந்தது.

தொடக்கத்திலிருந்தே நெருக்கடிக்குள் மன்னார் ஆயர் தம் பணியை செய்ய வேண்டியிருந்தது. 1983ம் ஆண்டு இனக்கலவரம் பெரிதாக வெடித்து எல்லா இடங்களிலும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. 1984ம் ஆண்டு மன்னார் பூநகரி வீதியில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு காரணமாக மன்னார் பெரியகடை பகுதி தாக்கப்பட்டு அநேக கடைகள் எரிக்கப்பட்டன. மன்னார் மக்கள் மிகவும் பதற்றமடைந்தனர். மன்னார் - முருங்கன் வீதியில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால், மன்னாரிலிருந்து முருங்கன் வரைக்கும் இராணுவத்தினர் தாக்கினர். ஏறக்குறைய 120 பேருக்கு மேலாக பொது மக்கள் கொல்லப்பட்டனர். ஆயரும் ஒரு சில குருக்களும் நேரில் சென்று பார்வையிட்டனர். பொது மக்கள் அனைவரும் மிகவும் வேதனை அடைந்தனர். 1985ம் ஆண்டு தை மாதம் 30ம் திகதி அடம்பன் பகுதியில் 26 பொது மக்கள் கொல்லப்பட்டனர். அது ஓர் இக்கட்டான காலம். 1987ம் ஆண்டு ஆயர் இல்லமும், 1988ம் ஆண்டு வாழ்வுதய கட்டிடமும், அதைத்தொடர்ந்து மறைக்கல்வி பணிக்கு ஒரு கட்டிடமும் அமைக்கப்பட்டன. 1989ம் ஆண்டு ஒரு வீட்டில் சிறிய குருமடம் முதன்முதலாக 13 குரு மாணவர்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாட்டில் இனக்கலவரம் நடைபெற்றுக் கொண்டிருந்தபடியால் மக்கள் அநேகர் இந்தியாவிற்கும் ஏனைய இடங்களுக்கும் அகதிகளாக இடம்பெயர்ந்து சென்றனர்.

உள்நாட்டில் மடுத்திருப்பதியை ஓர் அகதி முகாமாக அமைத்து ஏறக்குறைய ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் அகதிகளாக அடைக்கலம் புகுந்தனர். வாழ்வுதயம், U.N.H.C.R, SCF, M.A.R.R ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் அகதிகள் பாரமரிக்கப் பட்டு வந்தனர். காலம் மிகுந்த நெருக்கடியாக இருந்தபோது ஆயர் மிகவும் சிரமத்தின் மத்தியில் முன்னேடுத்துச் சென்றார். 1985ம் ஆண்டு வைகாசி மாதம் 10ம் திகதி தோட்டவெளி ஆலயத்திற்கு அருகில் யாத்திகர்களுக்கு ஓர் மண்டபம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அதை தொடர்ந்து 1991ம் ஆண்டு தை மாதம் 21ம் திகதி முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு 60ம் ஆண்டு நிறைவை கொண்டாடியது. இந்த ஆலயத்தை பங்குதந்தை அருட்பணி. தார்சீசியஸ் OMI கட்டிமுடித்தார். யாழ் பெரிய குருமடமும் 1996ம் ஆண்டு இடம்பெயர்ந்து ஒரு வருடமாக மடு அகதி முகாமில் இயங்கி வந்தது. 2008ம் ஆண்டு மடுத்தாயாருடைய திருச்சுரூபம் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடமாக இருந்த தேவன்பிட்டி பங்குக்கு எடுத்துச்செல்லப்பட்டது. மீண்டும் 2009ம் ஆண்டு ஆடி திரு விழாவுக்கு மடுத்திருப்பதிக்கு கொண்டு செல்லப்பட்டது வரலாறாகி விட்டது. இறைவன் எமது மறைமாவட்டத்தை அழைத்தல் நிலமாக ஆசீர்வதித்துள்ளார். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பின்வரும் 17 புதிய மறைவமாவட்டக் குருக்களை திருநிலைப்படுத்தினார்.

**அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:**

1982 - அருட்பணி. S.எமிலியானுஸ்பிள்ளை, அருட்பணி. S.A.H.ஜெயபாலன் குரூஸ், 1984- அருட்பணி. T.நவரெட்ணம், அருட்பணி. Y.தேவசகாயம் பிள்ளை, அருட்பணி. P.பிரான்சிஸ் ஞானசேகரம், அருட்பணி. ஆ.லடிஸ்லஸ், 1985 - அருட்பணி. A.இராயப்பு, 1987- அருட்பணி. S.செபமாலை, 1988 - அருட்பணி. L.ஞானாதிக்கம், அருட்பணி. S.V அவிதப்பர், 1989 - அருட்பணி. S.K.தேவராஜா கொடுதோர், அருட்பணி. ஆ.பீற்றர் மனோகர், அருட்பணி. B.F.டெஸ்மன் குலாஸ், 1990 - அருட்பணி. S.J.பெப்பி சோசை, 1991 - அருட்பணி. F.X.ரெஜினோல்ட், அருட்பணி. A.விக்ரர் சோசை, அருட்பணி. S.ஸ்ரீபன்ராஜ்.

**மன்னார் மறைமாவட்ட ஆயராக மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை**

1992ம் ஆண்டு புரட்டாதி 8ம் திகதி திருத்தந்தை புனித 2ம் அருள் சின்னப்பர் மன்னார் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராக மாற்றம் செய்யப்படுவதாகவும், மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மன்னார் பேராலயத்தின் இறை மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதே ஆண்டு ஐப்பசி மாதம் 20ம் திகதி மடுத்திருப்பதியில் புதிய ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை மன்னார் மறைமாவட்டத்திற்கு ஆயராக திருப்பொழிவு செய்யப்பட்டு அதே வாரமே பேராலயத்தில் மன்னார் மறைமாவட்டத்தை பொறுப்பேற்கும் சடங்கும் நடைபெற்றது. மக்கள் எல்லோரும் பெருமகிழ்வுடன் புதிய ஆயரை வரவேற்றனர்.

ஐப்பசி மாதம் 21ம் திகதி 1992ம் ஆண்டு மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கு மடுத்திருப்பதியில் விஷேட திருப்பலியும், பிரியாவிடை நிகழ்வும் நடைபெற்றது.புதிய ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை காலத்தில் உள்நாட்டுப் போர் உக்கிரமாக நடைபெற்றது. குண்டு வெடிப்புகளும் பீரங்கி சத்தங்களும் மக்களை பயமுறுத்திக் கொண்டே இருந்தன. மடுத்திருப்பதியில் 1999ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி குண்டு விழுந்து வெடித்தது. 40 பேர் கொல்லப்பட்டனர். அநேகர் காயப்பட்டனர். இதைக் கேள்விப்பட்டு ஆயர் உடனே அவ்விடத்திற்குச் சென்று இறந்தவர்களை அடக்கம் செய்யவும், காயப்பட்டவர்களை மிகவும் சிரமத்தின் மத்தியில் மன்னார் மருத்துவமனைக்குச் கொண்டு செல்லவும் ஒழுங்கு செய்தார். இந்த சம்பவம் மீண்டும் மன்னார் மக்களை மிகவும் துயரத்தில் ஆழ்த்தியது. 2007ம் ஆண்டு தை மாதம் 02ம்திகதி அந்தோனியார்புர கிராமத்திற்கு அருகாமையிலுள்ள படகுதுறையில் விமானத் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர். ஏறைக்குறைய 35 பேர் காயமுற்றனர். ஆயர் அவர்கள் உடனே அவ்விடத்திற்குச் சென்று நேரடியாக பார்வையிட்டு அரசாங்கத்திற்கு உடனே அறிவித்தார். இவ்விதமாக துணிவுடன் மக்களுக்காக குரல் கொடுத்து செயல்பட்டவர் என்பதற்காக தென்பகுதியில் ஒரு சிலர் அவருக்கு எதிராக குரல் எழுப்பினர். ஆயருடைய பணியை தமிழ் மக்கள் என்றுமே மறந்து விட முடியாது. அவருடைய காலத்தில் உள்நாட்டுப் போரினால் இடிந்து போன ஆலயங் களைப் புனரமைத்து புது பொலிவுடன் காட்சி அளிப்பதை இன்றும் காணலாம்.

2000ம் ஆண்டு வைகாசி 24ம் திகதி தொடக்கம் மடு தாயாரின் திருச்சுரூபம் மன்னார் மாவட்டத்திலுள்ள எல்லா பங்குகளுக்கு நாட்டின் அமைதிக்காகவும், ஆன்மீக புதுப்பித்தலுக்காகவும் எடுத்துச் செல்லப்பட்டது. மக்கள் உணர்வுபூர்வமாக மடுத் தாயாரின் திருச்சுரூபத்தை பக்தியோடு வரவேற்றக் காட்சியை என்றுமே மறக்கமுடியாது. உள்நாட்டுப் போர்க்காலத்தில் மக்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக இருந்தார்கள். தேவ அழைத்தல் குறையவில்லை. பெற்றோர் விசுவாசத்தில் தங்கள் பிள்ளைகளை வளர்க்க முயற்சி எடுத்தார்கள்.

**மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவருடைய காலத்தில் திருநிலைப்படுத்தப்பட்ட மறைமாவட்டக் குருக்கள் 55 பெயர்கள் பின்வருமாறு:**

1993 - அருட்பணி. S.மரியதாசன் சீமான், 1994 - அருட்பணி. A.ஞானப்பிரகாசம், 1995 - அருட்பணி. M.ஜெயபாலன், அருட்பணி. D.அலெக்சாண்டர் சில்வா, அருட்பணி. C.அந்தோனிதாஸ் டலிமா, அருட்பணி. P.கிறிஸ்துநாயகம், 1996 - அருட்பணி. S.மாக்கஸ், அருட்பணி. A.யூட் குரூஸ், 1997 அருட்பணி. R.அகஸ்ரின் புஸ்பராஜா, அருட்பணி. G.அருட்பிரகாசம், அருட்பணி. S.M.லியோண், அருட்பணி. P.கிறிஸ்து நேசரெட்ணம், அருட்பணி. பாக்கிய ரஞ்சித், 2000 - அருட்பணி. S.வசந்தகுமார், 2001- அருட்பணி. S.ஜெயபாலன், 2002 - அருட்பணி. S.இராசநாயகம், 2003 - அருட்பணி. A.சுரேந்திரன் றெவல், அருட்பணி. S.சத்தியராஜ், அருட்பணி. A.அன்ரன் ஜெயசீலன், அருட்பணி. S.அன்ரன், அருட்பணி. S.F.பிரான்சிஸ் மெரி டிகோல், 2006- அருட்பணி. E.செபமாலை, அருட்பணி. S.டக்ளஸ் லோகு, அருட்பணி. S.சவுல்நாதன், அருட்பணி. S.லக்கோண்ஸ் பிகிறாடோ, அருட்பணி. A.ஆரோக்கியம், அருட்பணி. E.டெனி கலிஸ்ரஸ், அருட்பணி. S.யூட் ஞானராஜ் குரூஸ், அருட்பணி. அருள்ராஜ் குரூஸ், 2007 - அருட்பணி. S.நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ், அருட்பணி. S.பிரான்ஸ்சிஸ் அசிசி, அருட்பணி. A.சுகுணராஜ் குரூஸ், 2008 - அருட்பணி. M.செல்வநாதன் பீரிஸ், அருட்பணி. A.லக்ஸ்ரன் டீ சில்வா, அருட்பணி. A.யூட் முரளிதரன், அருட்பணி. A.மரியதாசன் குருஸ், அருட்பணி. J.ஜெஸ்லி ஜெகானந்தன், 2009 - அருட்பணி. A.ரஜனிகாந், அருட்பணி. மில்ரன் தேவராஜா, அருட்பணி. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ, 2010 - அருட்பணி. தவராஜா, அருட்பணி. எமில் எழில்றாஜ், அருட்பணி. V.சுரேஸ் புஸ்பராஜ், 2011 - அருட்பணி. டெஸ்மன் ஆஞ்சலோ, 2012 - அருட்பணி. அருட்குமரன், 2013 - அருட்பணி. லோறன்ஸ் லியோண் அருட்பணி. றெறன்ஸ் கலிஸ்ரஸ் குலாஸ், 2014 - அருட்பணி. அன்ரனி சோசை, அருட்பணி. றொணிஸ் நிமல் வாஸ், 2015 - அருட்பணி. யோண் ஸ்ரனின் சோசை, அருட்பணி. மேரி பெயிலன் குரூஸ், அருட்பணி. பா. றொசான், அருட்பணி. இ. நீக்கிலஸ், அருட்பணி. தயாளன் கூஞ்ஞ, அருட்பணி. அமல்றாஜ் குரூஸ்

**ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை காலத்தில் உதயமான 19 புதிய பங்குகளின் பெயர்களும் பங்குத்தந்தையர்களும்:**

1993 கோமரசங்குளம் - அருட்பணி. ம.சூசைப்பிள்ளை, 1995 தோட்டவெளி - அருட்பணி. சகாயநாதன் (IVD), 1997 அளவக்கை அருட்பணி. சகாயநாதன் (IVD), 1998 கற்கிடந்த குளம் - அருட்பணி. செ. ஸ்ரிபன்ராஜ், 2000 இலுப்பைக்குளம் - அருட்பணி அவிதப்பர், பம்பைமடு - அருட்பணி. இ.அகஸ்ரின் புஸ்பராஜ், கீளியன்குடியிருப்பு அருட்பணி. ச.மரியதாசன் (சீமான்), 2004 வஞ்சியன்குளம் - அருட்பணி. ஞா.அருட் பிரகாசம், 2009 எழுத்தூர் - அருட்பணி.சூ. மரியதாசன் லியோண், குஞ்சுக்குளம் அருட்பணி.ச. செல்வநாதன் பீரிஸ், 2011 கனகராயன்குளம் - அருட்பணி. தி.நவரெட்ணம், சிலாவத்துறை - அருட்பணி. பி. றெஜினோல்ட், வேப்பங்குளம் - அருட்பணி. பி. கிறிஸ்துநாயகம், காத்தான்குளம் - அருட்பணி. வசந்தகுமார், 2013 சிறுக்கண்டல் - அருட்பணி. எமில் எழில்றாஜ், அந்தோனியார்புரம் - அருட்பணி. இ. ரஜனிகாந், 2014 தரணிக்குளம் - அருட்பணி. பீற்றர் அமல் (கப்புச்சின்), பறப்பாங்கண்டல் - அருட்பணி. சகாயநாதன் (IVD), 2015 கட்டைக்காடு - அருட்பணி. டெஸ்மன் குலாஸ்.

வருடந்தோறும் மறைமாவட்டத்திற்குரிய மேய்ப்புப்பணி திட்டமிடல் மாநாடுகள் நடாத்தப்பட்டு திட்டங்கள் போடப் பட்டன. பழைய ஆலயங்கள் இப்போர் காலத்தினால் பாதிக் கப்பட்டதினால் அவைகள் புனரமைக்கப்பட்டு புதிய ஆலயங் களாக காட்சி அளிக்கின்றன. நானாட்டான், அளவக்கை, இலுப்பைக்குளம், இரணை இலுப்பைக்குளம், பறப்பாங் கண்டல், ஓமந்தை போன்ற இடங்களின் ஆலயங்கள் புனரமைக்கப்பட்டன. ஆயருக்கு பக்கபலமாக இருந்த குரு முதல்வர் அருட்பணி. அ.விக்ரர் சோசை அடிகளாரை மறக்க முடியாது.

மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை 2015ம் ஆண்டு வருத்தத்தினால் பீடிக்கப்பட்டு தற்போது ஓய்வு பெற்றுள்ளார். அவரது தன்னலமற்ற பணிக்காக நாம் என்றுமே நன்றி உள்ளவர்களாக இருந்து அவருக்காக இறைவனிடம் வேண்டிக்கொள்வோம்.

(அடுத்த இதழில் தொடரும்)

# கலையருவியின் ஏற்பாட்டில் நடைபெற்ற

## மாபெரும் கரோல் பாடல் போட்டியும், இறுவட்டு வெளியீடும்

**புனித சிசிலியா விருது**

கலையருவியினால் 2020ம் ஆண்டு புனித சிசிலியா விருதுக்கான கரோல் பாடல் போட்டிகளானது கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரு பிரிவுகளாகவும், கரோல் பாடல் திறந்த இறுவட்டு போட்டியாகவும் நடைபெற்றன. இப் போட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பித்த பங்கு குழுக்களின் கரோல் கீதங்கள் அந்தந்தப் பங்கு ஆலயங்களில் வைத்து ஒளிப்பதிவு செய்யப்பட்டு காலத்தின் தேவைக்கேற்ப நடுவர்களுக்கு காணொளிகளாக அனுப்பி வைக்கப்பட்டன. இப் போட்டியின் நடுவர்களாக யாழ் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளரான திரு. த. றொபேட் அவர்களும், மாதா தொலைக்காட்சி இயக்குனரான இந்தியாவைச் சேர்ந்த அருட்பணி. டேவிட் ஆரோக்கியம் அடிகளாரும் கடமையாற்றினர்.

### கீழ்ப்பிரிவு

**1ம் இடம் - சிறந்த இசையமைப்பு**



மன்னார் பேராலயப்பங்கு

**2ம் இடம்**



வவுனியாப்பங்கு

**3ம் இடம் - சிறந்த பாடல் வரிகள்**



எழுத்தூர்பங்கு

**4ம் இடம்**



பண்டிவிரிச்சான்பங்கு

### மேற்ப்பிரிவு

**1ம் இடம் - சிறந்த இசையமைப்பு**



மகாறம்பைக்குளம் பரிட்சார்த்தபங்கு

**2ம் இடம்**



பள்ளிமுனைப்பங்கு

**3ம் இடம் - சிறந்த பாடல் வரிகள்**



யோசேவ்வாஸ்நகர்ப்பங்கு

**4ம் இடம்**



பேசாலைப்பங்கு

## பங்குபற்றிய குழுக்கள்

### கீழ்ப்பிரிவு



பேசாலைப்பங்கு



யோசேவ்வாஸ்நகர்ப்பங்கு



உயிலங்குளம்பங்கு

### மேற்ப்பிரிவு



உயிலங்குளம்பங்கு



எழுத்தூர்பங்கு



பண்டிவிரிச்சான்பங்கு



அந்தோனியார்புரம்பங்கு

# இறுவட்டு வெளியீடு




மீட்பர் இயேசு 2019 மேற்பிரிவு




விண்மீன் - 2019 கீழ்ப்பிரிவு




இரட்சகர் இயேசு 2020 கீழ்ப்பிரிவு




விடிவெள்ளி 2020 மேற்பிரிவு

மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் ஏற்பாட்டில் கடந்த 2019, 2020ஆம் ஆண்டுகளில் கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு கரோல் பாடல் போட்டிகளில் பங்குபற்றிய பங்குக்குழுக்களின் காணொளிகள் (DVD) நான்கு இறுவட்டுக்களாக வெளிவருகின்றன.

# இறுவட்டு திறந்த போட்டி - 2020

1ம் இடம்



ர.ஹைமன் கோல்டன்
வவுனியாப்பங்கு

2ம் இடம்



ஒ.காவியா
முருங்கன்பங்கு

3ம் இடம்



ஒ.கவிப்பிரியன்
முருங்கன்பங்கு

4ம் இடம்



நி.ஆதித்யன்
முருங்கன்பங்கு

# நினைவு கூருகின்றோம்..!

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17-02-1967

உதிர்வு 09-01-2020



### திரு. பர்னபாஸ் செசார் அவுறேலியப்பர் பெர்னாண்டோ (றெமி)

**வங்காலை ஆசிரியர்**

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய் உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்"

ஆண்டொன்று போனாலும் - உங்கள் அன்பு முகம் மறையுமோ அப்பா வீடிருண்டு கருமேக விழிசொரிந்து கண்ணீர் மழையென மாரி பெய்ய மாண்டது போல் காணலியே - முகம் மறைந்தது போல் தோணலியே நீண்ட குரலினிடை - அழுது வேண்டுகிறோம் ஆண்டவனே அழியாத ஒளியொன்றை - எங்கள் அப்பாவுக்குத் தாருமே..!

**பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்**

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 09-06-2000

இறப்பு 30-01-2020



### சி.ஹூறாண் கியூமன்

(புதுக்கமம், உயிலங்குளம்)

**"நல்லவர்கள் இவ்வுலகில் என்றும் நிலைப்பதில்லை"**

தாய்மடி பிரிந்து ஓராண்டு கடந்ததையா ஆறவில்லை உன் துயரம் உன் நோய்கண்டு பிறர்தூற்ற நாம் செய்த பாவம்தான் என்ன அப்பா, அம்மா, அக்கா பரிதவிக்க உறவுகள் உன்னை இழந்து இரங்கி நிற்க ஏக மகனாய் பிறந்து இருபது வயதினிலே இறைவனிடம் சென்றது ஏனடா. தம்பி காலன் உன்னை கவர்ந்ததன் காரணம் தான் என்ன? செல்லமே உன் புன்னகையின் முகத்தை இனி எப்போதடா காண்போம். கடவுளின் கருணையால் நீ மீண்டும் எம் குடும்பத்திலே அவதரிக்க இறைவனிடம் பரிவாய் இறைஞ்சுகின்றோம். மீண்டும் கொடையாய் நீ நம் குடும்பத்திலே வரவேண்டும். என்றோ ஒருநாள் எல்லோரும் ஒன்றாய் காண்போம் என்னும் நம்பிக்கையில் செல்லமே உன் ஆன்மா இறைவனின் நித்திய சந்நிதானத்தில் இளைப்பாற வேண்டுகின்றோம்...

**பிரிவின் துயரில்: அப்பா, அம்மா, அக்கா, உறவுகள், நண்பர்கள்.**

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 06-05-1943

விண்ணில் 24-12-2017



### திரு.அந்தோனி அருளப்பு

(பொன்தீவுகண்டல், முருங்கன்)

ஆண்டுகள் மூன்று சென்றாலும் ஆறாத்துயரில் துடிக்கின்றோம் அப்பா! கண்மணிபோல் எம்மை வளர்த்து கண்கலங்காமல் காத்தீர்கள் அப்பா! உங்கள் நினைவலைகள் எம் உயிரோடும் உணர்வோடும் என்றும் வாழ்கின்றது அப்பா! விழிப்பிலும் கனவிலும் உங்கள் இன்முகம் என்றும் எம்மைவிட்டு நீங்காது அப்பா. இறைவன் அடியில் எமக்காய் என்றும் வேண்டுங்கள் அப்பா! உங்கள் ஆன்மா இறைவனில் அமைதி காண தினமும் இறைவரம் வேண்டி நிற்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்**
**அன்பு மனைவி, பாசமுள்ள பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

## கட்டுரைகள்

# அருட்பணி. மேரி பஸ்ரியன்

இ.பற்றிசியா பீரிஸ் - வங்காலை.

இயேசுவின் வழியில் இறைபணியாற்ற முழுமனித விடுதலைப் பணியாற்ற தன்னை அர்ப்பணித்த பஸ்ரியனின் இறுதி அத்தியா யங்கள் இலட்சியத்துக்காக இரத்தம் சிந்திய மக்களின் பூமியாகிய மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலைக் கிராமத்திலேதான் நடந்தேறின. 1981இல் மன்னார் மறை மாவட்டம் யாழ் மறைமாவட்டத்தில் இருந்து புதியதாய் உதித்தபோது இங்கு இறைபணியாற்ற போதிய அளவு மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் இல்லாமையால் மன்னார் ஆயர் அவர்கள் அனுபவமிக்க பணியாளர்களை ஆரம்பகாலத்தில் இங்கு வந்து பணியாற்று மாறு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்ற சில பணியாளர்கள் யாழ் மறைமாவட்டத்தில் இருந்து மன்னார் மறைமாவட்டத்திற்கு பணியாற்ற முன்வந்தனர். எங்கெல்லாம் இறைபணி தேவையோ அங்கெல்லாம் முன் செல்லும் அருட்பணி. மேரி பஸ்ரியன் அடிகளாரும் எவரது தூண்டுதலுமின்றித் தானாக முன்வந்தார். ஏனெனில் அவர் மடுதிருப்பதியிலும், மன்னாரிலும், முருங்கனிலும் பணியாற்றிய அனுபவங்கள் அவருக்கு இருந்தன. அவரை ஆயர்தந்தை அவர்கள் மிக்க மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். முக்கிய மான பணியாகிய மன்னார் மறைமாவட்டத்தின் இளைஞர்களை வழிநடத்ததும் பொறுப்பும் ஆயர்தந்தை அவர்களால் அருட்பணி. மேரி பஸ்ரியன் அடிகளாருக்கு வழங்கப்பட்டது. இவர் ஏற்றுக்கொண்ட இப்பொறுப்பே இளைஞர்களை இவர் தேடிச் செல்லவும், இளைஞர்கள் இவரை தேடிவரவும் காரணமாக அமைந்துள்ளது. உயர்தர வகுப்பு மாணவர்கள், படித்துவிட்டு வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களோடு உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார். அவர்கள் தொழிற்கல்வி பெற வேண்டும் என்ற பரந்த உள்ளத்தோடு நடமாடும் கல்விச் சேவைத் திட்டத்தைக் கொண்டுவந்தார். தனிக்கத்தோலிக்கக் கிராமமான வங்காலையில் ஊடுருவிய பிரிவினை மறை சக்திக்கு எதிராக இளைஞர்கள் சிலர் செயற்பட்ட போதெல்லாம் அவ்விளைஞர்களை தந்தை மேரி பஸ்ரியன் கண்டித்தார். அவர்களுக்கு எதிராக நாம் எடுக்கக் கூடிய எதிர் நடவடிக்கை பரிசுத்த தேவமாதாவின் மீதுள்ள பக்தியை எம் மக்களிடையே பரப்புதல் ஒன்றே மேலானது எனக் கூறி புனித மரியாவின் பக்தியையும், பக்தி சபையையும் ஊக்குவிக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார். இனக் கலவரத்தைத் தொடர்ந்து பெருந்தொகையான மக்கள் வட கிழக்கிற்கு வருகை தந்தனர். அதில் மன்னார் நோக்கி வந்தவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் சேவையில் வாழ்வுதயத்தின் அனுசரணையுடன் அருட்தந்தை. மேரி பஸ்ரியன் முழுமையாக ஈடுபட்டார். நூற்றுக்கணக்கான அகதிகளை வங்காலையில் இளைஞர்களின் துணையுடன் அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் வழங்கி அன்புடன் பராமரித்தார். அம்மக்களை கரிசல், தோட்டவெளிக் கிராமங்களில் உள்ள கோவில் காணிகளில் குடியமர்த்துவதற்கும் ஆவண செய்தார்.



காலிலே எதுவித அணியும் இல்லாமல் கொழுத்தும் வெய்யிலிலும், கொடிய முட்புதர் களிடையேயும் இம் மக்களுக்காக காணிகள் ஒதுக்கி துப்பரவு செய்து வீடமைத்துக் கொடுக்க இரவு, பகல் என்று பாராது உழைத்தார். அருட்தந்தையின் சிவந்த மேனியை அந்தக் கொடும் வெய்யில் சுட்டுக்கருக்கியதை பலர் அறிவர். அதன் காரணத்தினால்தான் அருட்தந்தை இறந்த பின்பு அக்குடியேற்றக் கிராமம் ஒன்றுக்கு பஸ்ரிபுரி என்று பெயர் சூட்டப்பட்டது. "புனித செபஸ்ரியாரும் இளம் வயதிலேயே மரணம் அடைந்தார். அவர் பெயர் கொண்ட எனக்கும் அப்படிப்பட்ட மரணம்தான் ஏற்படும் என்றும் வஞ்சியன்குளம் எனும் கிராமத்திற்கு திருப்பலி நிறைவேற்றச் சென்ற அவர் அடுத்த முறைதான் திருப்பலி செலுத்த வருவது சந்தேகம். எனக்கு ஏதும் ஆபத்து நிகழலாம்" என்றும் அவர் கூறியதை அம்மக்கள் தந்தை இறந்தபின் வெளிப்படுத்திக் கூறியுள்ளனர். மன்னார் மறைமாவட்டத்திலே அதிகமான கல்விமான்களையும் நூறுவீதம் கிறிஸ்தவர்களையும் கொண்ட ஒரு கிராமம் வங்காலை. இறைவனின் திராட்சை தோட்டத்திலே பணிபுரியும் அநேக அருட்பணியாளர்களையும், துறவிகளையும் வழங்கிய கிராமம் இப்படியெல்லம் பெருமையுடைய இக்கிராமத்திலேயும் பலப்பிரச்சனைகள் இருக்கத்தான் செய்தன.

அரசியல் பிரச்சனைகளால் இரண்டுபட்டு நின்றது. இந்த நிலையிலேயே மக்களுக்குப் பணியாற்றுவது என்பது இலகுவான காரியமல்ல. வங்காலை பங்கில் பணியாற்றியவர் களுள் மிக இளையவரான அருட்பணி. பஸ்ரியனும் 32 வயதே உடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய பணியாளர் வந்ததும் ஆலயமணி ஒலித்து மக்களுக்கு தெரியப்படுத்துவது நடைமுறையில் உள்ள வழக்கம். ஆனால் தந்தை பஸ்ரியன் அதை விரும்பவில்லை. தன்னுடைய வருகை அப்படி யொன்றும் முக்கியத்துவம் வாய்ந்தல்ல என்ற கருத்தோடு மணியடித்து அறிவிப்பதை தடைசெய்து விட்டார். தந்தை பஸ்ரியனிடம் இருந்த தாழ்மையான சுபாவத்தில் வங்காலைப் பங்கு மக்கள் முதலில் கண்ட நிகழ்ச்சி இது. வரவின் போது ஆரவாரமுமின்றி வந்த குருமணி மேரிபஸ்ரியன் அடிகளார். இவ்வூரைவிட்டு ஏன் உலகை விட்டு பிரியும் போது பேரதிர்ச்சியையும், கவலையும், கண்ணீரையும் அல்லவா கொடுத்துச் சென்று விட்டார். இயேசுவின் பலிக்களம் ஜெருசலேம் என்றால் அருட்பணி. மேரி பஸ்ரியனின் பலிக்களம் வங்காலை. இதுதான் கல்வாரியியாயிருந்து. இங்குதான் அவர் கொண்ட இலட்சியத்தின் வெற்றி மரணம் கிட்டியது. வங்காலைப்பங்கு மக்களை காப்பாற்றுவதற்காக தன் உயிரை தியாகம் செய்த அன்புதந்தை பஸ்ரியனை 36 வருடங்களானாலும் எங்கள் உயிர் இருக்குமளவு மறக்க முடியுமா? எம் பங்குதந்தை இறக்கவில்லை. அவர் சிந்திய இரத்தம் எமது பங்கை தொடர்ந்தும் காப்பாற்றி ஆசீர்வதிக்கின்றது. தந்தையின் ஆன்மா எமது பங்கிற்காகவும் எமது மறைமாவட்டத்திற்காகவும் இறைவனிடம் பரிந்து பேசும். எம் தந்தை எல்லாப் புனிதர்களோடும் சேர்ந்து இறைபுகழ் பாடிக்கொண்டே இருப்பார்.●

# அருட்பணி. ரெம்சி குரூஸ் (அமதி) அடிகளார்

திரு. ஒஸ்பிஸ் யூட் குரூஸ் - வங்காலை.

மன்னார் மறைமாவட்டம் விசுவாசத்திற்காக பல மறைசாட்சிகளை விதையாக கொண்ட விளைநிலமாகும். இந்த விளைநிலத்தில் வங்காலை புனித ஆனாள் அன்னையின் அருட்கடாச்சத்தால் பல குருக்களும் துறவிகளும் விசுவாசத்திற்கு உரமிட்டு வருகிறார்கள். இந்த விசுவாச வரலாற்றில் ஆழமான விசுவாச வாழ்வும் இடைவிடாத



செபமாலை பக்தியும் கொண்ட லோறன்ஸ் ஆனந்தம் குருஸ், மாசில்லா குருஸ் குடும்பத்தின் ஏழாவது மகனாக அவதரித்தார் மரியன்னையின் ஆழமான பக்தி கொண்ட அருட்பணி. ரெம்சி குருஸ் (அமதி) அடிகளாரை அருட்பணி. L.A மைக்கல்சாமி, அருட்பணி. J.நீக்கலாஸ் அடிகளார்கள் இறைபணிக்கு ஊக்குவித்ததன் பயனாக வங்காலை புனித ஆனாள் அன்னையின் ஏழாவது மறைபரப்பாளராக 1970.12.21 ஆம் திகதி யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு L.R அன்ரனி ஆண்டகை அவர்களால் அருட்பொழிவு செய்யப்பட்டு அழைக்கப்பட்டார்.

அடிகளார் தமது ஆரம்ப இடைநிலை கல்வியை மன். புனித ஆனாள் ஆண்கள் பாடசலையிலும், உயர்கல்வியை புனித சம்பத்தியார் கல்லூரியிலும் கற்றதுடன் குருத்துவ கல்வியை கண்டி அம்பிட்டிய தேசிய கல்லூரியிலும் நிறைவு செய்திருந்தார். தனது குருத்துவ பணியை வவுனியா கோப்பாய், நாவந்துறை, முல்லைத்தீவு ஆகிய பணித்தளங்களில் ஆற்றியதோடு 1975ஆம் ஆண்டு இந்தியா திண்டிவனம் சென்று திருவழிபாட்டில் பண்பாட்டு மயத்தை கற்று வந்திருந்ததோடு 1978ஆம் ஆண்டு யாழ்ப்பாண மறைக்கல்வி நடுநிலையத்தில் திருவழிபாடு, திரு இசை என்ற பாடங்களுக்கு மறையாசிரியர்களின் விரிவுரையாளராக பணியாற்றியும் வந்துள்ளார்.

பின்னர் "கடவுளின் நற்செய்தியை அறிவிப்பதே நான் செய்யும் தொண்டு, அதுவே என் குருத்துவ பணி" (உரோ 15:16) என்ற அழைப்பினை ஏற்று இஸ்லாமிய நாடான பாகிஸ்தான் சென்றார். அங்கு கைவிடப்பட்ட நிலையில் வாழும் வறிய மக்களுக்கான தன் வாழ்வை அர்ப்பணித்தார். மரியாளை தன் வாழ்வின் மூச்சாக கொண்டு அம்மக்களின் வாழ்வுக்காகவும், பொருளாதார விடுதலைக்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டு உழைத்து அவர்களின் வாழ்வில் கிறிஸ்துவின் ஒளியையும், மரியாளின் பக்தியையும் ஏற்றிவைத்தார். பாலைவனமாக இருந்த அவர்களின் இடத்தில் மரியாளுக்கென அழகிய மாதா கெபி ஒன்றை கட்டி அழகு பார்த்தார். பாகிஸ்தான் திருச்சபைக்கு பல சவால்கள் மிகுந்த காலத்தில் தைரியத்துடன் தனது மறைபரப்பு பணியினை ஆற்றி வந்தார். இங்கு பணியாற்றிய ஆயர்களுக்கு பக்க பலமாக இருந்து செயற்பட்டு வந்துள்ளார். இதன் காரணமாகவே பல அச்சுறுத்தல்களையும், சவால்களையும் சந்தித்திருந்தார். எனினும் மரியாளின் மீது கொண்ட அளவற்ற நம்பிக்கையால் அவற்றை தாண்டி தனது மறைபரப்பு பணியை ஆற்றி மக்களின் மனதில் நீங்காத இடத்தை பெற்றுள்ளார். அம்மக்களுக்கு இறைவனை அறிவிக்கவே உருது மொழியை கற்று தேர்ந்தார். எளிமையான வாழ்வு வாழ்ந்த இவர் தனது குருத்துவ வாழ்வின் வெள்ளி விழாவை ஆடம்பரமாக கொண்டாடுவதை தவிர்த்து கொண்டார். எனினும் தாயகம் வந்த இவருக்கு புனித ஆனாள் அன்னையின் நவநாளின் தொடக்க நாளான 17.08.1995 அன்று அமரர் அருட்பணி. நோபட் அடிகளாரால் நன்றி திருப்பலி ஒழுங்கு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

தாயகத்தில் இருந்து பணித்தளம் திரும்பியவருக்கு 21.12.1995 வெள்ளி விழா நன்றி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இறைவனுக்கு நன்றி கூறப்பட்டது. அத்துடன் பங்குமக்களின் அன்பினையும் மீறி ஆயரின் புதிய பணிப்பொறுப்பை ஏற்க ஆயத்தமானார். அதிகாலை வேளை மரியாளின் செபமாலையை ஏந்தியவராக பயணித்த அடிகளார் 27.12.1995 எதிர்பாராத விபத்தில் சிக்கி "நீ என்றும் என்னுடன் இருப்பாய்" என்ற இறையழைப்பை ஏற்று இறைவனடி சேர்ந்தார்.

பங்கு மக்களின் அன்பில் கட்டுண்டவர் இறுதிவரை அவர்களை விட்டு பிரியாது மரியன்னைக்காக கட்டிய கெபியில் அடக்கம் செய்யப்பட்டு இன்றும் அம்மக்களுடன் வாழ்ந்து வருகிறார். அமரர் அருட்பணி. மேரி பஸ்ரியன் மன்னார் திருச்சபைக்கு மறைசாட்சியானது போல அவரது நண்பனான அமரர். ரெம்சி குருஸ் அடிகளார் பாகிஸ்தான் திருச்சபைக்கு மறைபோதகராக சென்று மறைசாட்சியானார்.

அடிகளாரின் குருத்துவ அழைப்பின் பொன்விழாவை நினைவுகூரும் நாம் அவரின் மறைபோதக பணிக்காக இறைவனுக்கு நன்றி கூறுவதுடன் இன்னும் அதிகமான மறைபோதகர்கள் இம்மண்ணில் உருவாக இறைவனிடம் செபிப்போம். விண்ணக வாழ்வில் வெள்ளிவிழாவைக் கொண்டாடும் இவருக்கு இறைவன் தனது அன்பை சுவைக்கும் பாக்கியத்தை நித்தியத்திற்கும் அளித்திட வேண்டி நிற்போம்.●

கட்டுரைகள்

# வெளிச்சம்

அருட்பணி. M.A. ஜெயசீலன்.

### நன்மை, மகிழ்ச்சி, இறைதிருவுளம்

நன்மை, மகிழ்ச்சி, இறைதிருவுளம் என்பன நமது நாளாந்த அறிவிலும் அனுபவத்திலும் தோற்றத்திலும் வேறுபட்ட விடயங்களை குறித்துக்காட்டும் வார்த்தைகளாகும். நமது ஆன்மீக வாழ்வில் இவ் வார்த்தைகளின் ஒருங்கிணைவு ஓர் ஆன்மீக வெளிச்சத்தை எவ்வாறு நமக்குத் தருகின்றது என்பதை இவ்வாக்கம் விளக்கி நிற்கின்றது.

### நன்மை

நற்செய்தியில் சொல்லப்படுவதைப் போல இறைவன் ஒருவரே நல்லவர் (லூக்கா 18: 19) அவருடைய சாயலில் படைக்கப்பட்ட இறை பிள்ளைகளாகிய நாம் நமது வாழ்விலும், செயலிலும் தீமையை தவிர்த்து நன்மையை மட்டும் தேர்ந்து வாழவேண்டியது அவசியமாகும். வேதநூலின் இணைச்சட்டம் அதிகாரம் 30 வாக்கியம் 15 இல் இறைவன் "இதோ பார் வாழ்வையும், நன்மையையும், சாவையும், தீமையையும் இன்று நான் உனக்கு முன்பாக வைத்துள்ளேன்" என்கின்றார். நன்மையை தெரிந்து கொள்வது என்பதற்கு பல பரிமாணங்கள் உண்டு. நல்லவற்றை சிந்திப்பது நலமானவற்றைப் பேசுவது, நன்மையை செய்வது, நன்மைக்காக உழைப்பது, நன்மையில் நிலைத்து நின்று வாழ்வது, ஏன் நன்மைக்காக ஒருவர் தம் வாழ்வை இழக்க துணிவது என்பன இவற்றில் அடங்குகின்றன. நாம் செய்கின்ற நன்மைகள் பிறருக்கும் நமக்கும் பயன் தருவதாக அமையவேண்டும். இயேசுவின் வார்த்தையில் இப்பயன்களை கனிகள் என்றும் கூறலாம். இதனால் கிறிஸ்தவ வாழ்வு நற்கனி கொடுப்பதற்கான ஒரு அழைப்பாக அமைந்துவிடுகின்றது. (யோவான் 15 : 8,16).

### மகிழ்ச்சி

நன்மையை மட்டும் தெரிந்து பிறருக்கும் நமக்கும் மற்றும் இயற்கைக்கும் பயன்தரும் கருமங்களை நாம் ஆற்றும் போது மட்டுமே நமது உள்ளத்தில் உண்மையான மகிழ்ச்சி ஊற்றெடுக்கின்றது. இதற்கு மாறாக சுயநலன்களால் தூண்டப்பட்டு நாம் செயற்படும் போது தோல்வியையே தேடமுயல்கின்றோம். இவற்றால் நாம் ஏமாற்றப்பட்டு, அலைக்கழிக்கப்பட்டு வாழ்வில் தோல்வியையே சந்திக்க நேரிடுகின்றது. இயேசு தூய ஆவியானவரால் நிரப்பப்பெற்று நன்மையை மட்டுமே செய்து (திருத்தூதர் பணிகள் 10:38) இறைமகிழ்ச்சியில் பங்குபற்றியதோடு அம்மகிழ்ச்சியை நம்மோடு பகிர்கின்றார். (யோவான் 15:11) இறைவன் அருளும் மகிழ்ச்சியில் வாழ்வது கிறிஸ்தவ வாழ்வுக்குரிய சிறப்பேயாகும். இது நமக்கு தூய ஆவியானவர் அருளும் கனியாகும். (காலத்தியர் 5:22)

### இறைதிருவுளம்

நன்மையை தேர்ந்தது, இறைமகிழ்ச்சியில் வாழ்வது இவ்வுலகில் இலகுவான விடயமல்ல. இறை உதவியுடன் மட்டுமே இது நிறைவேற முடியும். இதனால் நம்மில் யாரும் "நன்மையை நான் தேர்ந்து கொள்கின்றேன் இதனால் எனக்கும் பிறருக்கும் பயன் உண்டு. இது எனக்கு நிறைவை, மகிழ்ச்சியை தருகின்றது." என சாதரணமாக கூறிவிட முடியாது. ஏனெனில் நமது வாழ்வும் செயலும் இறைதிருவுளத்தோடு இணைந்து செல்கின்றதா என்பதை இறை உதவியுடன் நாம் அறிந்து கொள்வது அவசியமாகும். இன்று உலகத்தாரால் நன்மையும், பயனும் உண்டு மற்றும் மகிழ்ச்சியை திருப்தியைத் தருகின்றது என்று உணரப்படும், எண்ணப்படும் பல விடயங்கள் மட்டில் உதாரணமாக கருச்சிதைவு, இரக்கக் கொலை, பாலியல் பிறழ்வு நடத்தைகள்... திரு அவை தனது கற்பித்தலில் உறுதியாக இருந்து இவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பது இறை திருவுளத்தோடு/ திட்டத்தோடு இவை இணைந்து செல்லவில்லை என்பதனாலேயாகும். நமது நாளாந்த வாழ்வில், நமது சிந்தனையில், பேச்சில், செயல்களில், பணிகளில், வேலைத்தளங்களில் மற்றும் திருஅவையாக நாம் ஒன்றுகூடிவரும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இறைதிருவுளம் இம் மண்ணுலகில் நிறைவேற நம்மை அர்ப்பணித்து வாழ்வது நம் கடமையாகும்.

எனவே நன்மையைத் தேர்ந்து இறைதிருவுளத்தை அறிந்து நிறைவேற்றுவது என்பது இறைவன் நமக்கு தரும் ஞானமும் வல்லமையும் என்றே கூறவேண்டும். இவற்றை நிறைவாகக் கொண்டிருந்த இயேசுவும் தேவதாயாராம் அன்னைமரியும் இவ் வாழ்வை நமக்கு வாழ்ந்து கற்றுத்தந்தனர். இவர்களின் பாதையில் நம் வாழ்வும் நன்மையால் நிறைந்த, மகிழ்ச்சி நிறைந்த இறைதிட்டத்தை நிறைவேற்றும் வாழ்வாக அமையட்டும்.

உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வாழ்கின்றார்கள். இதனால் அவர்கள் செய்யும் அனைத்தையும் கடவுளோடு இணைந்ததே செய்கின்றார்கள் என்பது வெளியாகும் (யோவான் 3:21) ●

# புனித கன்னி மரியா இறைவனின் (இயேசு) தாய்

# விவிலியத்தில் அன்னை மரியா

திரு. அ. யூட் செல்வராஜன் லெம்பட்
வங்காலை

### அறிமுகம்

அன்னை மரியா குறித்த விசுவாச உண்மைகளை விளக்கும் வகையில் மரியா பற்றி திருவிவிலியம் கூறுவது யாது? என இக்கட்டுரை ஆராய்கின்றது. எனவே திருவிவிலியத்தின் உதவியுடன் இதனை நோக்குவோம்.

திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் கடவுளின் மீட்புத் திட்டத்தில் பங்கேற்கப்போகும் பெண் என்ற வகையிலும், புதிய ஏற்பாட்டில் அது நிறைவேற அர்ப்பணித்தவர் மரியா என்றவகையிலும் பல விடையங்கள் இடம்பெற்றுள்ளன.

### மீட்புத் திட்ட வாக்குறுதியில் மரியா

ஆதியில் பாவம் செய்த மனிதனுக்குத் தண்டனை வழங்கிய கடவுள் அன்றே மீட்பையும் வாக்களித்தார். (தொ.நூ. 3:15.) "உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் இடையே பகையை உண்டாக்குவேன். அவள் வித்து ...." இங்கு அவள் என்பது மரியாவை குறித்து நிற்கின்றது.. இது அவ்வாறே நிறைவேறியது என்பதை (கலா. 4:5.) "கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் ..." உறுதிப்படுத்துகிறது. மேலும் அப்பெண் மரியா என்பதை வேதம் வெளிப்படுத்துகிறது. (தி.வெ. 12.1-2,5) பெண் ஒருவர் காணப்பட்டார்... அவர் கருவுற்றிருந்தார்..." எல்லா நாடுகளையும் இரும்புக்கோல் கொண்டு நடத்தவிருந்த ஓர் ஆண் குழந்தையைப் அவர் பெற்றெடுத்தார். வேத வல்லுனர்கள் அப்பெண் மரியா என்றே கூறுகின்றனர். இதன் பின்னர் குறிப்பிடப்படும் விண்ணகத்தில் நடந்த போர் (தி.வெ12.7-9) இது ஆதியில் இடம்பெற்ற சம்பவம் என்பதனால் மரியாவின் தெரிவும் ஆதியிலேயே இடம்பெற்றிருக்க வேண்டும் என விவிலிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (எரே. 1:5.) "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன் நீ பிறக்கும் முன்பே ...", (தி.பா. 139.16.) நீர் எனக்குக் குறித்து வைத்துள்ள நாட்கள் எல்லாம் எனக்கு வாழ்நாள் எதுவும் இல்லாத காலத்திலேயே உமது நூலில் எழுதப்பட்டுள்ளன. இதிலிருந்து அன்னை மரியா இயேசுவின் தாயாக தெரிவு செய்யப்பட்டதென்பதும் ஆண்டவராகிய கடவுளின் முன்குறித்த மாபெரும் திட்டமாகும்.

### அன்னை மரியா கன்னித் தாய்

மரியா இயேசுவை கன்னிமையுடனேயே பெற்றெடுத்தார் (ஏசா. 7:14.) கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண் மகனைப் பெற்றெடுப்பார். அது நிறைவேறியது என்பதை புதியேற்பாட்டு பகுதிகள் உறுதிப்படுத்துகின்றன. (மத். 2.22-23., லூக். 1.26-27,34) "ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரை கடவுள் கலிலேயாவிலுள்ள நசரேத்து என்னும் ஊரில் இருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் பெயர் மரியா.,இது எப்படி நிகழும் நான் கன்னியாயிற்றே. மேலும் யோசேப்பின் கனவில் தோன்றிய வானதூதர் உரைத்த செய்தி (மத். 1:20.) "யோசேப்பே தாவீதின் மகனே உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம், அவர் கருவுற்று இருப்பது தூய ஆவியால் தான்". இவற்றிலிருந்து மரியா கன்னித்தாய் என்பது திருவிவிலியத்தில் உறுதிப்படுத்தப்படுகின்றது.

அன்னை மரியா அருள்நிறைந்தவரும், ஆசி, பேறுபெற்றவரும். அன்னை பிறப்பிலேயே அருள் நிறைந்தவராக, ஆசி பெற்றவராக இருந்தார். (லூக். 1.28) "அருள் மிகப் பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்". என்ற கபிரியேலின் வாழ்த்து, எலிசபேத்தின் வார்த்தைகளும் வெளிப்படுத்து கின்றன. (லூக். 1.42-43) "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்... ஆண்டவர் உமக்கு சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்". அத்தோடு (லூக். 11.27) "கூட்டத்தில் இருந்த பெண் ஒருவர் உம்மைக் கருத்தாங்கி பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்". மரியா தன் பாடலில் (லூக். 1.48) "இது முதல் எல்லாத் தலைமுறையும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்".

### அன்னை மரியாவின் தாழ்மையும், முழுமையான அர்ப்பண வாழ்வும்

அன்னை தன்னைத் தாழ்த்தி முழுமையாக கடவுளுக்கு அர்ப்பணித்தவர். (லூக். 1.38) "நான் ஆண்டவரின் அடிமை... நிகழட்டும்." அன்றைய சமூக நிலை, தனக்கு ஏற்பட போகும் அவப்பெயர் என்பவற்றை அறிந்தும் அவர் அர்ப்பணித்தார். மேலும் தான் தூய ஆவியினால் கடவுளின் மகனைக் கருத்தரித்திருப்பதை அறிந்திருந்தும் உடனடியாக சென்று வயது முதிர்ந்த நிலையில் கருவுற்றிருந்த எலிசபேத்திற்கு உதவினார். (லூக். 1.39-40,56) "மரியா புறப்பட்டு யூதேயா மலைநாட்டில் உள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபேத்தை வாழ்த்தினார். மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபேத்தோடு தங்கியிருந்த பின்பு தம் வீடு திரும்பினார்". மரியாவின் பாடலும் சான்று. (லூக். 1.48) "அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்". இயேசுவை மாட்டுத் தொழுவத்தில் பெற்றது. (லூக்.2.7) அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பிள்ளையைத் துணியில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்"., எகிப்து செல்தல் (மத். 2.13-15) யோசேப்பு எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு இரவிலேயே எகிப்திற்குப் புறப்பட்டுச் சென்றார். ஈற்றில் இயேசு சிலுவையில் தொங்கிய நிலையில் (யோவா. 19.25-27) "சிலுவை அருகில் இயேசுவின் தாயும்... நின்று கொண்டிருந்தார்". அனைத்தையும் அன்னை தாழ்மையோடு ஏற்றுக்கொண்டார் எனத் திருவிவிலியம் சான்று பகர்கிறது.

### இயேசுவோடு இணைந்திருந்த அன்னை மரியா, இயேசுவால் அன்போடு மதிக்கப்பட்டார்

இயேசுவோடு அன்னை எப்போதும் இணைந்திருந்தார். இயேசுவின் விருத்தசேதனம், அர்ப்பணம். (லூக். 2.22-28) இயேசு பாஸ்கா விழாவிற்குச் சென்றபோது (லூக். 2.41-51) "பாஸ்காவிற்கு சென்ற இயேசு அங்கேயே தங்கிவிட அவரைத் தேடிய பெற்றோர் மூன்றாம் நாள் அவரைக் காண்கின்றனர்". அன்னை (லூக். 2.48, 49-51) "மகனே ஏன் இப்படிச் செய்தாய்... தேடிக்கொண்டிருந்தோமே. என்றார், இயேசு. நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள் நான் ...... ... .தெரியாதா, என்றார். எனினும் அவர் தன் தாயின் வார்த்தைக்கு மதிப்பளித்து அவர்களோடு சென்றார்"., அன்னைக்கு பணிந்தே நடந்தார். (லூக். 2.51) "நசரேத்தில் அவர்களுக்குப் பணிந்து நடந்தார்". இயேசு தன் பணியை ஆரம்பித்து, முதல் அரும் அடையாளத்தைச் செய்தபோது (யோவா. 2.1-11) "கானாவில் திருமண வீட்டில் திராட்சை இரசம் தீர்ந்தபோது அன்னை மரியா இயேசுவை நோக்கி திராட்சை இரசம் தீர்ந்து விட்டது என்றார். அதற்கு இயேசு அம்மா அதைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும், எனது நேரம் இன்னும் வரவில்லையே என்றார்". இங்கு (நாம்) என்பதை நோக்கினால் இயேசு தம் தாயையும் தம்மோடு இணைத்துக் கூறுவதாகப் பொருள் கொள்ள முடியுமென வேதவல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர். எவ்வாறாயினும் இயேசு அங்கு ஆறு கற்தொட்டி நீரைத் திராட்சை இரசமாக்கி தாய்க்கு மதிப்பளித்தார். இயேசுவைக் காண அன்னை மரியா வந்தபோது "இதோ உம் தாயும் சகோதரரும் உம்மைக் காண வந்துள்ளனர் எனக்கூற இயேசு (மாற். 3.34-35) தம்மைச் சூழ்ந்து அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து இதோ என் தாயும் சகோதரர்களும் இவர்களே, கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்களே என் தாயும் சகோதரர்களும், என்றார்". இதனை தவறாக புரிந்து கொண்டோர் இயேசு தாயை சாதாரணமான ஒரு பெண்ணாகவே கருதினார் என வியாக்கியானம் செய்கின்றனர். எனினும் இயேசு கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றிய தனால் தான் மரியா தன் தாயானார் என ஏனையவர்களுக்கு ஒரு முன்மாதிரியானவர் மரியா என்பதை எடுத்துரைக்கின்றார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் பெண் ஒருவர் இயேசுவை கருத்தாங்கி பாலூட்டி வளர்த்த தாய் பேறுபெற்றவர் எனக் கூற இயேசு அதற்கு (லூக். 11.28) "இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர் என்றார்". இங்கும் இயேசு தன் தாயையே மேன்மைப்படுத்தி உள்ளார் எனலாம். இதற்கு இயேசுவின் வார்த்தைகளே சான்று. (லூக்.7.28) "மனிதனாய்ப் பிறந்தவருள் யோவானை விட பெரியவர் ஒருவருமில்லை, ஆயினும் இறையாட்சிக்கு உட்பட்டோருள் மிகச் சிறியவரும் அவரிலும் பெரியவரே. இங்கு இயேசு திருமுழுக்கு யோவானை மேன்மைப்படுத்தி அவரைப்போல் ஏனையோரும் ஆண்டவரது விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்றே எதிர்பார்த்தார். அன்னை மரியா குறித்த இயேசுவின் நிலைப்பாடும் இதுவே. இயேசு தன் சிலுவை சாவின்போது கூட இயேசு தன் தாயை மறந்து விடவில்லை. (யோவா. 19.26-27) "அம்மா இவரே உன் மகன், தன் சீடரிடம் இவரே உம் தாய் என்றார். அந்நேரம்முதல் அச்சீடர் அவரைத் தன் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்". இது அன்னை மரியா தனியான ஒருவராகவே இருந்தார் என்பதையும் யதார்த்தமாக வெளிப்படுத்துகின்றது.

➡ 14

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# கலை இலக்கிய சாரளம்

## வயிற்றோட்டமும் நீரற்ற நிலையும், பாதுகாப்பும் முதலுதவியும்

திரு.ச.தேவசகாயம், நியூயோர்க் USA.

மனிதகுல வரலாறு முழுவதிலும் போரால் கொல்லப்படுபவர்களை விடவும் நோயால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையே அதிகம். இனம், மதம், மொழி, நிறம், சாதி என எந்த வேற்றுமையையும் நோய்கள் பார்பதில்லை. பண்டைக்காலம் முதல் தற்போதுவரை உலகை ஆட்டிப் படைத்த ஆட்கொல்லி நோய்களில் வாந்தி பேதி அல்லது வயிற்றோட்டம் அல்லத கொலரா என்பதும் நாம் மறுக்க முடியாத ஒன்றாகும். ஆனால் இன்று நமது நாட்டில் இதன் தாக்கம் ஓரளவு குறைவாக இருப்பினும் பெரும் மழை, வெள்ளப்பெருக்குப் பின்னரான காலப்பகுதியிலும் மற்றும் அசுத்தமான சூழல்களுடன் கூடிய இடங்களிலும், பெரும்பாலும் குழந்தைகளுக்கும் இந்நோய் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதனால் இந்த நோய் பற்றியும், அதற்கான பாதுகாப்பு, மற்றும் முதலுதவி பற்றியும் அறிதல் அவசியம. ஆகின்றது.

அசுத்தமான உணவையோ, நீரையோ உட்கொள்ளும் போது ஏற்படும் குடல் தொற்று நோயே வயிற்றோட்டம் என அழைக்கப்படுகின்றது. இதன் நோயரும்பு காலம் 1-5 நாட்களைக் கொண்ட மிகக்குறைந்த காலமாகும். இந்த நோய்க்கிருமி உடலினுள் புகுந்தவுடன் ஒரு குடல்நஞ்சை உற்பத்தி செய்கின்றது. இதனால் வலி ஏதும் இல்லாமல் நீர் போன்ற வயிற்றோட்டமும் சில வேளை வாந்தியும் ஏற்படும். இதனால் உடலிருந்து கடுமையான நீர்ச்சத்திழப்பு உண்டாகும். இதில் அநேகமாக குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் முதியோர் பாதிக்கப்படுகின்றனர். தகுந்த மருத்தவம் அளிக்கப்படவில்லை என்றால் மரணமும் நேரிடலாம்.

உயிரோடிருப்பதற்கு சகல பிராணிகளுக்கும் நீர் அவசியம் ஆகும். நீரின்மை உள்ளிருள்ள பிராணிகளில் மாற்றங்களை மிக விரைவாக ஏற்படுத்தும். மனித உடலானது மிகக்குறைந்த உணவுடன் வாரக்கணக்காக வாழக்கூடியதாக இருக்கலாம். ஆனால் நீரோ வேறு வகைத் திரவங்களோ கிடைக்காவிடில் இறந்துவிடும். மனித உடலை சரியான வகையில் செயற்பட வைத்திருப்பதற்கு நாளொன்றுக்கு 2-3 லீற்றர் நீர் தேவைப்படுகின்றது. இந்நீரானது மனித உடலின் செயற்பாட்டில் முக்கியமாக மிதமிஞ்சிய கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதில் முக்கிய பங்காற்றுகின்றது. குறிப்பாக வயிற்றோட்டம் ஏற்படுவதன் காரணமாக நாம் உட்கொள்ளும் திரவத்தைவிட வெளியேறும் திரவம் அதிகமாக இருப்பின் உடல் உலர்ந்துபோக ஆரம்பிக்கின்றது. இந்த நிலைமை நீர்வற்றல் (Dehydration) எனப்படுகின்றது. இது ஒரு ஆபத்தான நிலையாகும். இவ்வாறான நீர்வற்றல் நிலை ஏற்பட்ட ஒரு நோயாளியில் பின்வரும் அறிகுறிகளை அவதானிக்கலாம்.

1. தாகம், வாய் வரண்டு காணப்படுதல்.
2. வெளியேறும் சிறுநீரின் அளவு குறைதல் அல்லது முற்றாக சிறுநீர் வெளியேறாது போதல்
3. சாதாரண சிறுநீரானது வெளிறிய மஞ்சள் நிறமுடையதாக இருக்கும். ஆனால் இங்கு நிறம் கூடியதாகக் காணப்படும்.
4. தோல் உலர்ந்து சுருங்கிக்காணப்படும். (தோலை பிடித்து கிள்ளினால் தோல் அவ்வாறே இருக்கும். மீண்டும் பழைய நிலைக்குச் செல்லாது.)
5. குழந்தைகளாயின் அவர்களது கண்கள் தாழ்ந்தும் உச்சம் தலையில் காணப்படும் மென்மையான பகுதியும் தாழ்ந்தும் காணப்படும்.

**முதலுதவி முறைகள்:**

வயிற்றோட்டம் இருப்பின் நீரற்ற நிலை ஏற்படாமல் இருக்க முன்னேற்பாடுகளை எடுத்துக்கொண்டு உடன் வைத்திய உதவியை நாடவும்.

வயிற்றோட்டம் ஆரம்பித்தவுடனேயே அதிகமான பானங்களை குடிக்க கொடுக்கவும். பிரதானமாக பிள்ளைகளாயின் விரும்பிக்குடிக்கும் சூப்புகள், இளநீர், அரிசிக்கஞ்சி, பழச்சாறு போன்றவற்றுடன் வைத்தியசாலையில் அல்லது மருந்துக் கடையில் கிடைக்கும் வாய் மூலம் மீள நீரேற்றும் உப்பு (ஜீவனி) (Oral Rehydration Salt- ORS) மற்றும் வீட்டில் தயாரிக்கும் பானம் போன்றவற்றைக் கொடுக்கவும்.

பால் குடிக்கும் குழந்தையாக இருப்பின் அதிகளவு தாய்ப்பாலைக் கொடுக்கவும். இரவிலும் அதிகமாகக் கொடுக்கவும். கொதிக்க வைத்து குளிர்ந்த நீரை சுத்தமான கோப்பை, கரண்டி போன்றவற்றைப் பாவித்து மேலதிகமாகப் பருக்கவும்.

சிறிதளவு உணவுவைத் தொடர்ந்து கொடுக்கவும். நாளொன்றுக்கு நான்கு தடவைக்கு மேல் வயிற்றோட்டம் இருக்குமாயின் வீட்டில் மேற்குறிப்பிட்ட வாய் மூலம் மீள நீரேற்றும் உப்பு (ஜீவனி) இல்லாத சந்தர்ப்பத்தில் பின்வரும் விசேட பானத்தைத் தயாரித்து இழக்கப்படும் நீரையும் உப்பையும் ஈடுசெய்து நீர் வற்றலைத் தடுக்கலாம்.

1) 1 லீற்றர் கொதித்து ஆறிய சுத்தமான நீர்
2) 8 முழுத்தேக்கரண்டி சீனி
3) 1 முழுத்தேக்கரண்டி கறியுப்பு

இவை மூன்றையும் சுத்தமான பாத்திரத்தில் கலந்து எடுத்துக் கொள்ளவும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பானத்தை சில நிமிடங்களுக்கு ஒரு தடவை கொடுக்கவும். வாந்தியும் இருக்குமாயின் நீரால் வாயை கழுவவும், நீரை வெளியே துப்பவும், இது வாந்தியின் உருசியை அகற்றி விடும். தயாரிக்கப்பட்ட விசேட பானத்தை குடிக்க கொடுக்கவும். வயிற்றோட்டமும் வாந்தியும் தொடர்ந்து இருக்குமாயின் குடிக்கும் அளவை அதிகரிக்கவும். நோயாளிக்குப் பக்கத்தில் ஒருவரை இருக்கும்படி பணிக்கவும். போதியளவு பானங்கள் குடிக்கப்படுகின்றதா என்பதை பார்ப்பது அவரது பொறுப்பாகும்.

வயிற்றோட்டத்தால் ஏற்படும் நீரற்ற நிலையைத் தடுப்பதற்கு ஓர் சக்தி வாய்ந்த மருந்து வாய் மூலம் மீள நீரேற்றும் உப்பு (ORS) இது ஜீவனி என்ற பெயரிலும் வேறு பெயர்களிலும் வைத்தியசாலைகளிலும், மருந்துக்கடைகளிலும் கிடைக்கின்றது. குழந்தைகள் உள்ள வீடுகளில் எப்பொழுதும் இதனை வைத்திருக்க மறக்க வேண்டாம்.

வீட்டில் தயாரிக்கப்பட்ட உப்பு சீனிக் கலவையையும், வாய் மூலம் மீள நீரேற்றும் உப்பு (ஜீவனி) கலவையையும் ஒரே நேரத்தில் கொடுக்க வேண்டாம். கூடியவரை ஜீவனியைக் கொடுங்கள். இல்லாதபோது மட்டுமே வீட்டில் தயாரிக்கும் பானத்தைப் பயன்படுத்துங்கள். மிக விரவாக வைத்திய உதவியை நாடுங்கள். வயிற்றோட்டம் ஒரு தொற்று நோய். அதாவது நோயாளியிடமிருந்து சுகதேகி ஒருவருக்கு பரவலாம். வயிற்றோட்டம் உள்ள ஒருவரின் மலம் தொற்றை பரப்பக்கூடியது. ஒருவரை பராமரித்த பின்னர் கைகளை நன்கு சவர்க்காரமிட்டு கழுவவும். சாப்பிட முன்னர் கைகளை கழுவுதல் வேண்டும். மலசல கூடம் இல்லாத சந்தர்ப்பத்தில் மலத்தை எரிக்கவும் அல்லது புதைத்து விடவும். இது நோயின் பரவலைக் கட்டுப்படுத்தும் ஒரு வழிமுறையாகும்.

# குளிர்காலத்திற்கான சரும பராமரிப்பு




குளிர்காலம் தொடங்கி விட்டாலே சரும ரீதியாக பல பிரச்சினைகள் ஏற்படும். சருமம் வறண்டு போகாமலும், மிருதுவாகவும் இருப்பதற்கு எவ்வாறு பராமரிக்கலாம் என்று பார்ப்போம்.

- குளிர்காலத்தில் முகம் வறண்டு காணப்பட்டால் பாதாம் பருப்பை பாலுடன் அரைத்து முகத்தில் தடவி சிறிது நேரம் ஊறியவுடன் கழுவ வறட்சி நீங்கி முகம் பொலிவு பெறும்.
- கோதுமை மாவுடன் பால் ஆடையை கலந்து முகத்தில் தடவி 5 நிமிடம் மசாஜ் செய்து பிறகு 15 நிமிடம் கழித்து கழுவிட முகம் பளபளப்பாகும். பின் கற்றாழை ஜெல் தடவி வர சருமம் மென்மையாக பளிச்சென்றிருக்கும்.
- பனி அதிகமிருக்கும் இக்காலத்தில் சோப்பு சருமத்தை மேலும் வறட்சியாக்கும் முகத்திற்கு வெண்ணெய் தடவி சிறிது நேரம் கழித்து பச்சைப்பயறு மாவு தேய்த்துக் கழுவிட முகம் எண்ணெய் தன்மையுடன் பளபளப்பாக இருக்கும்.
- பப்பாளிப்பழ விழுதுடன் பால் சேர்த்து முகத்தில் தடவி சிறிது ஊறியதும் கழுவ சருமம் சுத்தமாக இருக்கும்.
- உதடுகள் வெடித்து பாளம்பாளமாக காட்சியளிக்கும். இதைப்போக்க உதடுகளில் வெண்ணெய் தடவுவதோடு வேஸ்லின் தடவி வர உதடுகள் மென்மையாகும். இரவில் தேங்காய் எண்ணெய் தடவிட உதடுகள் பொலிவு பெறும்.
- உதடுகளுக்கு லிப்பாம் தடவ வேண்டும்.
- குதிகால்களிலும் வெடிப்பு ஏற்பட்டு நடக்க முடியாமல் சிரமப்பட நேரிடும். இதை தவிர்க்க பாதங்களுக்கு தூய விளக்கெண்ணை தடவி வரலாம். நைட் க்ரீம் தடவிக் கொண்டு சாக்ஸ் அணிந்துகொண்டு படுக்க சருமம் மென்மையாக இருக்கும்.
- குளிரில் பாதங்கள் எரிச்சல் உணர்வு அடைவதோடு நடக்க சிரமமேற்படும். இதுபோன்ற பிரச்சினைகளுக்கு சுடுநீர் ஒத்தடம் தரலாம்.

# உடல், மன சோர்வை நீங்கும் நௌகாசனம்



இந்த ஆசனங்களைத் தொடர்ந்து செய்வதால் உடலளவில் மட்டுமல்ல... மன அளவிலும் பல நன்மைகள் உண்டு. ஆழ்மன அச்சத்தை உடைத்து நமது ஆளுமைத்திறனை மேம்படுத்துகின்றது.

**செய்முறை**

விரிப்பின் மேல் வசதியாக மல்லாந்து படுத்துக்கொள்ளவும். இது ஆரம்ப நிலை. ஆழமாக சுவாசத்தை உள்ளிழுக்கவும். சுவாசத்தை உள்ளடக்கி, இரு கால் மற்றும் கைகளைத் தரையில் இருந்து 15 செ.மீ. மேலே தூக்கவும். அதே நேரம் கழுத்து மற்றும் தோள்பட்டையை உயர்த்தி கால் விரல்களைப் பார்க்கவும்.

புட்டப்பகுதியில் உடலை சமநிலைப்படுத்தி நிற்பது இறுதி நிலை. உடல் ஒரு படகு போல இருப்பதால் இதற்கு நௌகாசனம் என்று பெயர். 10 விநாடிகள் இறுதி நிலையில் நின்று பின் மெதுவாக சுவாசத்தை வெளியேற்றி ஆரம்ப நிலைக்கு வரவும். 3-5 முறைகள் இப்பயிற்சியைச் செய்யலாம்.

**பயன்கள்**

இந்த ஆசனம் நமது தசை, ஜீரண, ரத்த ஓட்ட, நரம்பு மற்றும் நாளமில்லாச் சுரப்பிகளின் செயல்பாட்டினை ஊக்குவித்து டென்ஷனை குறைத்து ஓய்வளிக்கின்றது. காலை எழுந்த உடன் செய்தால் சோம்பல் நீங்கி உடனடி புத்துணர்வு கிடைக்கும். வயிற்றுத் தசைகளை இறுக்கம் அடையச் செய்வதனால் எடை குறைய உதவுகின்றது

இந்த ஆசனங்களைத் தொடர்ந்து செய்வதால் உடலளவில் மட்டுமல்ல... மன அளவிலும் பல நன்மைகள் உண்டு. ஆழ்மன அச்சத்தை உடைத்து நமது ஆளுமைத்திறனை மேம்படுத்துகின்றது. வயிற்றுப் பகுதியில் ஆரோக்கியமான அழுத்தத்தை ஏற்படுத்துவதால் ஜீரண மற்றும் இனப்பெருக்க மண்டல உறுப்புகள் அனைத்தையும் சீராக இயங்கச் செய்கின்றது.

# கொஞ்சம் சிரிங்க





**டொக்டர்:** வாங்க உட்காருங்க.. கையை நீட்டுங்க.. நாக்கை நீட்டுங்க.. ஆ..ன்னு சத்தம் கொடுங்க.. நல்லா இழுத்து மூச்சு விடுங்க.. திரும்புங்க.. இப்ப சொல்லுங்க என்ன செய்யுது.

**டொக்டரிடம் வந்தவர்:** ஒன்னும் இல்லை டொக்டர். மகளுக்கு கல்யாணம் அழைப்பிதழ் கொடுக்க வந்தேன்.. இந்தாங்க. வரட்டா! –

**ஆசிரியர்:** "கண்ணகி மதுரையை எரித்தாள்" இது என்ன காலம்?

**மாணவர்:** "FIRE SERVICE" இல்லாத காலம் Sir!

**ஆசிரியர்:** !!!

......................

**ராஜா:** வாழ்க்கையைப் பத்தி சிம்பிளா ஒரு கருத்து சொல்றேன் கேட்டுக்கோ

**ரோஜா:** எங்க சொல்லு

**ராஜா:** நம்ம உடம்புல ஆயிரக்கணக்கான "செல்" இருக்கு.. ஆனால் ஒரு செல்லில் கூட "சிம்" கார்டைப் போட முடியாது.. போட்டுப் பேசவும் முடியாது.. இதுதான் வாழ்க்கை! –

**நோயாளி:** ஏன் டாக்டர், இதைக் கொடுத்த போது சுகர் மாத்திரைன்னுதானே சொன்னீங்க

**டொக்டர்:** ஓம் சொன்னேன் அதுக்கென்ன

**நோயாளி:** இல்ல டாக்டர் வீட்டுக்குப் போய் சாப்பிட்டு பார்த்தேன் இனிப்பாவே இல்லையே.. கசந்துச்சே அதான் வந்தேன்

**டொக்டர்:** ???

**ஆசிரியர்:** உன்கிட்ட 3 பிஸ்கெட் இருக்கு அப்ப உன்ன பாக்க உன் friends 3 பேர் வராங்க நீ என்ன செய்வ?

**மாணவன்:** பிஸ்கெட்ட ஒழிச்சு வெச்சுருவேன் சார்.

# மன்னா விளம்பரப் பலகை

ஒரு அளவிற்கு மேல் யாரிடமும் இறங்கி போகாதே பிறகு உன் மதிப்பு என்னவென்று உனக்கே தெரியாமல் போய்விடும்.

கஷ்டங்கள், கவலைகள் உனக்கு மட்டும் தான் என்று புலம்பாதே இங்கு சந்தோஷத்தை மட்டும் அனுபவிக்கும் மனிதர் எவருமில்லை

தனக்குத் தெரிந்தவற்றை மட்டும் மனிதன் பேசுவானாகில் உலகில் அமைதி நிலவும் ஒருவர் சொல்லும் உண்மையை விட பலபேர் சேர்ந்து சொல்லும் பொய்யே ஏற்கப்படுகிறது.

முன்னேற சந்தர்ப்பங்கள் தானாக வருவதில்லை அவை உருவாக்கபடுகின்றன என்னால் முடியும் என்ற நம்பிக்கை கொண்ட மனிதன் எப்பொழுதும் அடுத்தவர் உதவியை நாடுவதில்லை

# கவிதைக் களம்

## மலர்ந்தது புத்தாண்டு



புதிய ஆண்டு பிறந்தது
மனங்கள் கனவில் மிதந்தது
உள்ளக் கவலை மறைந்தது
மனிதம் மண்ணில் தவழ்ந்தது

மாற்றங்கள் உலகில் மலர்ந்தது
பகைமைகள் மனதில் கரைந்தது
திவ்வியபாலன் அருள் பொழிந்தது
உடைந்த உள்ளம் ணைந்தது

மனித நேயம் உயர்ந்தது
பேராசையின்றி தாழ்ந்தது
செல்வம் பாரில் வீழ்ந்தது
செருக்கு பூமியில் ஒழிந்தது

பாலன் பாதம் நம்மில் பதிந்தது
பாலனின் உள்ளம் உறைந்தது
தூய்மை வாழ்வில் கலந்தது
புதிய விடியல் புலர்ந்தது !

ஜெ. அபிஷானி
குழந்தை இயேசுபுரம்

## பாதர் பஸ்ரியனும் பாதச்சுவடுகளும்



மாவீரனை மலர்களால்
சூடாமல் மனங்களால்
சூடுங்கள் என்னும்
கூற்றுக்கிணங்க – எம்
மண்ணின் மைந்தன் உனை
என் மனதால் சூடியவனாய்
மலர்ச்செண்டாய்
சேர்க்கிறேன் - என் வார்த்தைகளால்.

நீ உதிர்ந்த வேளை மலர்ந்தவன் நான்
ஆதலால் உன் முகம் அறிந்ததில்லை
ஆனால் எங்கோ ஓர் குரலில்
கேட்டேன் உன் புகழாரம்
புயலடித்தாலும் புறம் தள்ளாத
மாவீர மன்னர்கள் மடிந்த மண்ணில்
மலர்ந்தவன் - நீ மங்காது உன் புகழ்

பழிக்காய் பலியான பரமன் இயேசுவைப் போல்
இன்னொரு பரமனாய்அவதரித்தாய் நீ
ஆதலால் தான் உன் பணிக்காய்
புனிதம் போற்றும் வேத சாட்சிகள் மரித்த
மன்னார் மண்ணில் வாசம் செய்ய வந்தாயோ
உன் வாசம் வீசும் முன்னே விஷ நாசினிகள்
உன்னை அறுத்ததென்ன?

அங்கு எருசலேமில் மக்களுக்காய்
சிலுவையில் சிந்திய அதே இரத்தம்
இங்கு எமக்காய் நீ சிந்தினாய்
நீ சிந்திய - இரத்தம் துளியில் - எங்கள்
கண்ணீர் துளிகளையிட்டு
உன் பாத சுவட்டில் எம் பாதம் பதித்து
உன் பணி தொடர்கிறோம்
உன் நீங்கா நினைவுகளோடு

S. ரூபன் பீரிஸ் - வங்காலை

## வருக வருக புத்தாண்டே

புதுயுகம் புலர்ந்து புது இனம் மலர்ந்து
புத்தொளி வீசி
புத்தாண்டே வருக வருக

யுகம் ஒன்று படைத்து
யுக்திகளால் வென்று
யுகத்தினை உயர்த்திட
வீறு நடை போட்டு
வருக வருக புத்தாண்டே

புத்தாயிரத்தில் பூத்து குலுங்கும் மலராய்
புத்தம் புதிய புத்தாண்டாய்
ஜாதி மத இன பேதமின்றி
இனிமை தர வருக வருக புத்தாண்டே

பூமிதன்னை வேரறுத்து
பூவிற்கெல்லாம் ஆயுட்களைந்து
கொல்ல வந்த கொரோனா என்னும் கொடியவனை
அழிக்க வருக வருக புத்தாண்டே

வையகத்தை வாழவைக்க
வசந்தங்களை அள்ளித் தெளிக்க
துன்ப துயரங்கள் களைந்து போக

மானிடர் எல்லாம் நலமுடன்
சுகம் வாழ இடைவெளியின்றி இன்புற்றிருக்க
இறைவரம் வேண்டி வருக வருக புத்தாண்டே

P.அன்ரனி குரூஸ் சரன்சலா மேரி
புனித அன்னை தெரேசா ஆலயம், துட்டுவாகை.

## மறை பூத்த மண்

செம்மொழியாய் தொன்மொழியின் தேசமென போற்றப் பெறும்
வடபுலத்தின் விளைநிலமாய் தலை நிமிர்ந்து காட்சியளிப்பது
எம் உயிரான மறைமாவட்டமே..!

இரட்சிப்பின் சின்னமதாய் தேவபரன் சுமந்து சென்ற
திருச்சிலுவை நிழலினிலே உயிர்பெற்று உறவுகொண்டு
உண்மை மறை தான் வழியில் எம்முன்னோர் வாழ்வமைத்தார்.
இறைவனது ஆவியவர் இவர்களுக்கு துணை நின்று

உந்து சக்தி தான் கொடுக்க ஈழத்தின் மூலையெல்லாம்
இறைவேதம் பரவலாச்சு மறைபரப்ப மறைவல்லோர்
சவேரியாரும், யோசேவ்வாசும் மறை வேத இலட்சியத்தால்
பாரத மண்ணிலிருந்து கடல் வழியே வந்திறங்கி
இறையூக்கம் தான் கொடுத்தார்.

இவர்களின் ஊக்கமிங்கு பெருவிருட்சம் தானாகி
திரு அவையும் வளரலாச்சு...!
கிறிஸ்தவத்தை அழிக்க எண்ணி ஆட்சிவேந்தன் சங்கிலியன்
ஆண்டவரைத் தொழுதோரை ஆவி உயிர் போகும்வரை
வாளினாலே கொன்றொழித்தான் தொகை தொகையாய்
இறைவனுக்காய் இறப்பதிலே இவர்களும் தான்
இன்பம் கண்டார்.

மறைசாட்சிகள் தாமாகி இன்னுயிரை தாம் கொடுத்தார்
உத்தமர்கள் தியாகமதால் உதயமாச்சு
எம் மன்னார் மறைமாவட்டம்
எம் மறைக்காய் மரித்தவரை ஏற்றிடுவோம் இதயமதில்
புனிதர்களாய் ஆக்கிடவே செபித்திடுவோம் தினந்தோறும்

சி.சுஜீவன் - மடுறோட்.

## மன்னா வாசகர்களே!

மன்னா பத்திரிகைக்கான பணத்தை
காலம் தாமதிக்காமல் உடனடியாக
வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை
மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

## புதுமைகளின் புனிதர் யோசேவ்வாஸ்



இந்தியாவிலே கோவா பிரதேசத்தில்
சென்தோ ஆல் பிறந்த புனிதர் இவர்
மகனாக கிறிஸ்தோபர் வாஸ் அவருக்கும்
மரிய மிராண்டா அவர்களுக்கும் பிறந்தவர்

கண்கள் இரண்டும் என்னைப் பார்க்க மனம் முழுவதும்
என் இறைவன் என்று சித்திரை மாதம் பிறந்தார்
மரிய மிராண்டா அவர்களின் வழியாக புனிதர்
இறைவனின் பிள்ளையாக வளர்க்கப்பட்டுள்ளார்.

குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார் தம் ஊரிலே
ஐந்து ஆண்டுகள் பணி செய்த வாஸ் அடிகள்
கனரா பிரதேச குரு முதல்வராக நியமிக்கப்பட்டார்.
இலங்கை வாழ் மக்களின் துன்பம் அறிந்தார்.

இலங்கை நோக்கி பயணம் தொடர்ந்தார்
தொழிலாளி வேடம் புகுந்து உள்ளே வந்தார்
அறியாத மொழி தெரியாத மக்களிடம்
தனது கஷ்ரத்தை வெளிப்படுத்த முடியாதவராக இருந்தார்.

வரட்சியை நோக்கி தன் குரலையெழுப்பி இடத்தை
மழையால் நிரப்பினார் - ஓயாவை கால் நடையால்
கடந்து சென்றார் - கண்டி எனும் பிரதேசத்தில்
வைசூரி நோயினால் பீடிக்கப்பட்டவர்களை பராமரித்தார்
பாதணிகள் இன்றி மேடு பள்ளம்
பாராது ஓயாது நடந்து கொண்டிருந்தார்.

அவர் வழி செல்லும் பிள்ளையாய்
அவர் மகனாய் என்னையும் அவரைப்
போல மாற்றிக் கொள்ள நானும்
புனிதனாக வாழ முயலுவேன்.

L. சாள்ஸ் சர்மிலன்
தரணிக்குளம், வவுனியா.

## புலர்ந்துவரும் புத்தாண்டே...! வருக...!

புலர்ந்து வரும் புத்தாண்டே புதுவாழ்வு கொண்டு வா
புவி வாழும் மாந்தரை புன்னகையோடணைக்க வா
மலர்ந்து வரும் மறு ஆண்டில் பல மாற்றங்கள் காணவா
உலர்ந்து போன உள்ளத்திற்கு உறுதி கொடுக்க வா

மனிதத்தை காத்திட மகிழ்ந்து வா
புனிதம் மண்ணில் நின்று நிலைத்திட வா
அநீதியும் அவலமும் போக்கிட வா
நீதி மண்ணில் நின்று நிலைத்திட வா

உலகின் அவலநிலை போக்கிட வா
கவலை கலக்கங்கள் கலைந்திட வா
சிறைபட்ட வாழ்வை சிறப்புற செய்திட வா
மறைபட்ட வாழ்வுக்கு மறுவாழ்வு கொண்டு வா

நிம்மதி வாழ்வு நின்று நிலைக்க வா
வெண்மதி போல ஒளி கிடைக்க வா
கண்ணீரும், கம்பலமும் நீங்கிட வா
சந்நிதியில் மனிதம் மலர்ந்திட வா

வருக வருக புத்தாண்டே..! வருக வருக...!
தருக தருக வழியும், ஒளியும் தருக தருக...!

அ. ஜஸ்மின் ஷறோன்,
நானாட்டான்.



# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.218

## எசாயா (அதிகாரம் 56 முதல் 66 முடிய)

உங்கள் விடைகளை மாசி மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | | 03 | | 04 | | | | |
| | ✶ | | | | | 05 | | | | |
| | | | | | 06 | | 07 | | | |
| | 08 | | | | | | | | ✶ | |
| ✶ | | | | 09 | | | | | | |
| | | | | 10 | | ✶ | | | | 11 |
| 12 | | | | | | | | 13 | | |
| | 14 | | | | | 15 | | | 16 | |
| | ✶ | | | | | | 17 | | | |
| 18 | | | | | | 19 | ✶ | | | |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அவர்களை நான் என் ...................... அழைத்து வருவேன்.
4. நாங்கள் எங்களைத் ...........................க் கொண்டபோது நீர் எங்களைக் கவனியாதது ஏன்?
5.உங்கள் இனத்தாருக்கு உங்களை.................க் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு.
7. நீதியின் .......................... அவர்கள் நடக்கவில்லை.
8. கீழை நாட்டினர் அவரது ...................... நடுங்குவர். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன.)
12. உன் ................. கிடைத்த திராட்சை இரசத்தை வேற்றின மக்கள் பருகமாட்டார்கள்.
14. ஏனெனில் அவர்கள் ஆண்டவரது .............ப் பெற்றோரின் வழிமரபினர்.
15. தூதரோ, வானதூதரோ அல்ல அவரே ...................... யாக அவர்களை விடுவித்தார்.

### மேலிருந்து கீழ்

1. நீ துணை வேண்டிக் குரல் எழுப்பும்போது நீ .................. சிலைகள் உன்னை விடுவிக்கட்டும்.
2. உன் கையில் புதியதோர் ....................... பெற்றாய்.
5. அவர் “இதோ நான்” என ........................ தருவார்.
6. ..................... முழங்குவதுபோல் உன் குரலை உயர்த்து.
7. அவர் .......................... நீதியின்மை தீயதாய்ப்பட்டது.
8. நான்............ யடையுமாறு நட்டுவைத்த மரக்கிளை அவர்கள்.
11. ஆக்கோர் பள்ளத்தாக்கு மாடுகளுக்குத் ....................... வும் அமையும்.
13. நெடுங்காலமாய்......................... கிடைத்தவற்றை அவர்கள் கட்டியெழுப்புவார்கள்
16. நெடுங்காலமாய்ப் பாவம் செய்திருக்க நாங்கள் ................ ப் படுவது எங்ஙனம்?

### கீழிருந்து மேல்

2. ஒவ்வொருவரும் தம் சொந்த .................... த் தேடுகின்றனர்.
3. நொறுங்கிய ........................... நெஞ்சத்தினரோடும் நான் வாழ்கின்றேன்.
5. அவனோ என்னைவிட்டு விலகி .......................... போக்கிலே சென்றான்.
6. கொடியவர்களுக்கு அமைதியே இல்லை ....................... என் கடவுள்.
9. எருசலேம் ........ச் செயலற்று அமைதியாயிரேன். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
10. ஆண்டவரில் நான் பெரு ..................... அடைவேன். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன).
15. மகிழ்ச்சியுடன் .............க் கடைப்பிடிப்போர்க்கும் உம்மையும் உம் வழிகளையும் நினைவில் கொள்வோர்க்கும் நீர் துணை செய்ய விரைகிறீர்.
17. உம்மைப் பற்றிக்கொள்ள ...................... எவரும் இல்லை.
19. இறைவேண்டல் செய்யப்படும் என் .................... அவர்களை மகிழச் செய்வேன்.

### வலமிருந்து இடம்

6. வெகுகாலமாய் நான் அமைதியாய் இருந்ததால் அன்றோ நீ ...................... அஞ்சாதிருக்கின்றாய்.
11. விடுதலையை எதிர்பார்த்திருந்தோம் அது எங்களுக்குத் ................. உள்ளது.
13. இவ்வாறு மேன்மிகு என் ............. ப் பெருமைப்படுத்துவேன்
15. எங்கள்............ செயல்கள் எல்லாம் அழுக்கடைந்த ஆடை போல் ஆயின. (3வது எழுத்து 1வது எழுத்துக்குக் கீழே உள்ளது)
16. துன்பங்கள் அனைத்திலும் அவர்களின் .................. ஆனார்.
18. “என் மக்களின்- வழியிலிருக்கும் .................... அகற்றுங்கள்” என்று கூறப்படும்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 216 சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
பி.ஜெ. றோஜினி றோச்,
பள்ளிமுனை.

**இரண்டாம் பரிசு:**
J. ஸ்வேதா,
சிலாவத்துறை

**மூன்றாம் பரிசு:**
J. வேஜினி டிலைக்சனா,
சின்னப்பண்டிவிரிச்சான்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 203 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 195 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.216ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. சி. வின்சன் யோட்ஸ் - சின்னப்பண்டிவிரிச்சான்.
2. ச. மரிய கொண்சிக்கா குரூஸ் - சிலாவத்துறை.
3. J. றொசேல் லோகு – முத்தரிப்புத்துறை.
4. M. பிளண்ரீனா – மன்னார்.
5. S. செபமாலை மார்க் - வங்காலை.
6. ஜெனிங்ஸ் ஜெசிமன் - குழந்தையேசுபுரம்.
7. சி. சந்திரக்குமார் சைலி – தலைமன்னார்.
8. J.A. சொவ்னா குரூஸ் - தலைமன்னார்.
9. அ. ஜெயப் பிரியா – பெரியகட்டைக்காடு.
10. B. பிறின்சியா பிகிறாடோ - பள்ளிமுனை.
11. றெ. லியோ – பொன்தீவுகண்டல்.
12. R. அனற் விதுஷிகா – அச்சங்குளம்.
13. வி. கொட்வின் டெல்சியா – சிலாவத்துறை.
14. V. டனுசியா – சாந்திபுரம்.
15. பி. காருண்யா – பெற்றா.
16. P. பவுஸ்ரீனா றோச், - பள்ளிமுனை.
17. அ. புளோறன்ஸ் - நானாட்டான்.
18. அ. ஆன் அதிஸ்ரா குரூஸ் - பெரிய பண்டிவிரிச்சான்.
19. D. பிரான்சிஸ்கா – பேசாலை.
20. K. லூட்ஸ் வேழினி – தாழ்வுபாடு.
21. நி. சுஜானி – அடம்பன்.
22. ச. கினிஷ்கா - பேசாலை.
23. நி. நியானி – அடம்பன்.
24. அ. மேரி அனிற்றா – சின்னப்பண்டிவிரிச்சான்.
25. அ. எறிக்கா வலன்ரீனா – பிடாரிகுளம்.
26. அ. றெபேக்கா அன்ரனி – பிடாரிகுளம்.
27. P.J. லோஷன் - தேவன்பிட்டி.
28. அ. றொஷாந்திகா – சின்னப்பண்டிவிரிச்சான்.
29. அ. ஆன். பிரதிஸ்கா டயஸ் - வங்காலை.
30. கத்தரின் சேவியர் - பெரியகடை.
31. J. அமிர்தம் - சிறுத்தோப்பு.
32. யே. சோபியா – பெரிய பண்டிவிரிச்சான்.
33. G. ஜொகிஷா – பேசாலை.
34. ச. மேரி சுகனியா – பொன்தீவுகண்டல்.
35. லு. ஆன் ஆஷிக்கா – முருங்கன்.
36. S. கனியூட்டா – முருங்கன்.
37. A. லூட்ஸ்மேரி றோச் - பள்ளிமுனை.
38. வி. அந்தோனிஸ்ரெலா – மடுறோட்.
39. கொ. டலக்ஷனா குரூஸ் - முத்தரிப்புத்துறை.
40. A. ஆன் டியூஜினி றோச் - பள்ளிமுனை.
41. B. லியான்சி பிகிறாடோ – பள்ளிமுனை.
42. நி. யாழிசன் - செட்டிகுளம்.
43. பி. விமல்ராஜ் - யோசேவ்வாஸ்நகர்.
44. ஆன். றொமெக்ஸினி சில்வா – வங்காலை.
45. S. மேரி துஷி – துள்ளுகுடியிருப்பு.
46. D. P. பிறிஸ்ரா – அளவக்கை.
47. ஜெ. நிதர்சனா லெம்பேட் - வங்காலை.
48. வினுஷிகா காந்தசீலன் - முல்லைத்தீவு.
49. லதுர்சிகா நேசராசா – முல்லைத்தீவு.
50. J.P. மேரி ஸ்ரெலா – துள்ளுகுடியிருப்பு.

11ம் பக்கத் தொடர்ச்சி

## புனித கன்னி மரியா இறைவனின்...

### அன்னை மரியா விசுவாசத்தின் (நம்பிக்கை) தாய்

அன்னை வாழ்வில் நடந்த யாவையும் தன் உள்ளத்தில் இருத்தி சிந்தித்தார் என வேதம் கூறுகின்றது. குழந்தையைக் காண வந்த இடையர்களின் செய்தி (லூக்.2.19.), சிமியோனின் இறைவாக்கு (லூக்.2.33), எருசலேம் ஆலயத்தில் இயேசுவின் வார்த்தைகள் (லூக். 2.51),

அதுவரை அனைத்தையும் ஆழமாக சிந்தித்த அன்னை கானாவூர் திருமணத்தில் நம்பிக்கையாக அறிக்கையிட்டார். (யோவா.2.3,5) அவ்வீட்டின் குறையை நிறைவாக்க தன் மகனால் மட்டுமே முடியுமென நம்பினார். “இயேசுவின் தாய் பணியாளர்களிடம் அவர் உங்களுக்குச் சொல்வதை யெல்லாம் செய்யுங்கள்”, என தன் நம்பிக்கையை வெளிப் படுத்தி எம்மையும் இயேசுவில் முழுமையாக நம்பிக்கை கொள்ள அழைப்பு விடுத்து இயேசுவின் முதல் சீடத்தி ஆகின்றார். இவையே அன்னையை இயேசுவின் சிலுவை அடியில் உறுதியோடு நிற்கச்செய்தது. (யோவா. 19.25) இவையே அன்னை மரியா விசுவாசத்தின் தாய் என்று அழைக்கப்பட காரணமானது.

### திருஅவையுடன் இணைந்திருந்த அன்னை மரியா

அன்னை ஆதித் திருஅவையோடு இணைந்திருந்தார். (தி.ப.1.14) மத்தியாஸ் திருத்தூதராகத் தெரிவு செய்யப்பட்ட போது, (தி.ப.1.23-26.) பெந்தக்கோஸ்தே நாளில் தூய ஆவியாரின் பொழிவின்போது, (தி.ப.2.1-4) “பெந்தக்கோஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில்க் கூடியிருந்தார்கள்... அனைவரும் தூயஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர்”.

### அன்னை மரியா பரிசுத்தமான (தூய) கன்னித் தாய்

கடவுள் பரிசுத்தமானவர் (தி.பா. 99.9), (தி.வெ.3.7), (லூக். 1.35.) “உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது”. இவ்வாறான கடவுளின் மகனைப் பெற்றெடுத்த மரியா நிச்சயமாகத் தூயவராகவே இருப்பார். எடுத்துக்காட்டாக ஆண்டவருடைய பேழையைத் தொட்டவர்களே தண்டனைக்கு உள்ளாகினர். ஆண்டவரது பேழையை தாவீது எருசலேமிற்கு எடுத்துச் சென்றார். நாக்கோனின் களத்திற்கு வந்தபோது காளைகள் மிரள உசா கடவுளின் பேழையைத் தாங்கிப்பிடித்தார் அப்போது கடவுளின் சினம் உசாவைத் தாக்க அவன் அங்கேயே இறந்தான். (2சாமு. 6.6-7) இவ்வாறு கடவுளின் பிரசன்னத்தைத் தாங்கிய பேழை மிகுந்த தூய்மையானதாக இருக்கின்றபோது அதிபரிசுத்தமான கடவுளைத் தாங்கிய தாய் பரிசுத்தமானவரே. எனவே பிறப்புமுதல் எப்பொழுதும் அன்னை மரியா தூயவரும், அமல உற்பவமுமாவார். அதனால்த்தான் அன்னை மரியா இறைவனின் தாயானார்.

### முடிவுரை

இறைவனின் தாயான புனித கன்னி மரியா பற்றிய விசுவாச உண்மைகளை விவிலிய அடிப்படையில் ஆய்ந்து அறிந்தோம். எனவே அன்னைக்குரிய மரியாதை, வணக்கம் செலுத்துவது எம் கடமை. எனினும் ஆண்டவருக்குரிய ஆராதனை, புகழ்ச்சி என்பவற்றை ஒருபோதும் அன்னை மரியா, புனிதர்களுக்கு செலுத்துவது வேதத்தின்படி ஆண்டவரது கட்டளைகளுக்கு விரோதமானதாகும். (வி.ப. 20.1-5) எனவே அன்னை, புனிதர்களிடமன்றி அவர்கள் வழியாக ஆண்டவரை மன்றாடுவதோடு அவர்களது வாழ்வில் காணப்பட்ட நற்பண்புகளையும், புண்ணியங்களையும் எம் வாழ்வில் கடைப்பிடிப்போம்.●

3ம் பக்கத் தொடர்ச்சி

## உறுதிப்பூசுதல் கொண்டாட்ட...

இந்நிகழ்வில் ஆயரின் செயலாளர் அருட்பணி. நீக்கிலஸ் அடிகளார், கப்புச்சின் சபையின் இலங்கை மறைபணித்தள அதிபர், அருட்பணி. A. செல்வராஜ் அடிகளார், அருட்பணி. அலெக்ஸ் அடிகளார் OFM ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை தரணிக்குளம் பங்குத்தந்தை அருட்பணி. ஆரோக்கிய சாமி அடிகளார் OFM சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.●

## வாசகர்களின் கவனத்திற்கு

**மன்னா பத்திரிகையில் ஆக்கங்கள், விளம்பரங்களைப் பிரசுரிக்க விரும்பினால் அவற்றை குறித்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்**

7ம் பக்கத் தொடர்ச்சி

## மடுமாதா மருத்துவ நிலைய...

இவ் மருத்துவ நிலையத்தில் வெளி நோயாளர் பிரிவு, மருந்தியல் சேவைகள், Scan சேவைகள், Digital X-Ray சேவைகள், மருத்துவ ஆய்வுகூட சேவைகள், இலத்தரனியல் இதய வரைபு (ECG), மருத்துவர் ஆலோசனைகள் மற்றும் Channelling சேவைகளான - பொது அறுவைச் சிகிச்சை மருத்துவ ஆலோசனைகள், மகப்பேற்றியல் மற்றும் மகப்பேறு மருத்துவ ஆலோசனைகள், எலும்பியல் அறுவைச் சிகிச்சை மருத்துவ ஆலோசனைகள், காது மூக்கு மற்றும் தொண்டை அறுவைச் சிகிச்சை மருத்துவ ஆலோசனை, குழந்தை நல மருத்துவ ஆலோசனை, நரம்பியல் மருத்துவ ஆலோசனை, பேச்சுப் பயிற்சி மருத்துவ ஆலோசனை, இயன் மருத்துவ ஆலோசனை ஆகிய சேவைகள் அனைத்தும் ஆரம்பிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சேவைகள் அனைத்தையும் தினமும் காலை 7.30 மணி முதல் மாலை 7.30 வரை பெற்றுக்கொள்ள முடியும.●

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## வெட்டுப் புள்ளிக்கு மேல் பெறுபேறு பெற்ற மாணவர் விபரம்

### மன்னார் மாவட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் முதல் இடத்தில் மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி

மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரியானது இவ்வருடம் தரம் 5 இற்கான புலமைப் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் முதல் இரு இடங்களையும் அதிகமான மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி பெற்றதில் முதல் இடத்தையும் பெற்று சாதனை நிலைநாட்டியுள்ளது. செல்வி ர. றொசானா ஷைலின் குரூஸ் 195 புள்ளிகள் பெற்று மாவட்டத்தில் முதல் இடத்தையும், செல்வி அ.கு. நயோலின் அபிரியானா 194 புள்ளிகள் பெற்று மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும், செல்வி வி.சு. மதுஷா பெர்னாண்டோ 193 புள்ளிகள் பெற்று பாடசாலையில் மூன்றாம் இடத்தையும் பெற்றதுடன். 34 மாணவிகள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் உயர் புள்ளிகளைப் பெற்று சாதனை நிலை நாட்டியுள்ளனர். கொரோனா நோய் பரவுதல் காலத்தில் பல வகையான இடர்பாடுகளை இவர்களது கற்றல் நடவடிக்கைகளில் எதிர்கொண்ட போதிலும் அயராத முயற்சியாலும் கடின உழைப்பாலும் இவர்களை இந்நிலைக்கு உருவாக்கிய அதிபர், வகுப்பாசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவிகள் கல்லூரிச் சமூகத்தினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.●




### மன். சென். மேரிஸ் வித்தியாலயம், பேசாலை.




கடந்த 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில், பேசாலை, மன். சென். மேரிஸ் வித்தியாலயத்தில் 112 மாணவர்கள் தோற்றி, அதில் 108 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 96.4 சதவீத சித்தியைப் பெற்றுத் தந்துள்ளனர்.

அத்துடன் 27 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று தகுதி அடைந்து சாதனைபடைத்துள்ளனர். அத்துடன் 98 மாணவர்கள் 100 புள்ளிகளுக்குமேல் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**வெட்டுப் புள்ளிக்கு மேல் பெறுபேறு பெற்ற மாணவர் விபரம்**

நீ.டெறிங்டன் டபரேரா – 189, றொ. இவான்சா மிராண்டா – 184, க.யூட் டாறியோ லியோன் - 179, டிக்சன் டிவாசன் சோசை – 178, அ.எனொக்சன் பெர்னாண்டோ – 176, கி.மிதுர்ஷன் பெர்னாண்டோ – 173, இ.சுகிர்தா – 172, பா.எப்சிலேயா – 170, யோ.சு.அதிஸ்ரன் குரூஸ் - 170, ச.சஸ்விக்கா – 169, ம.விகாஷன் பெர்னாண்டோ – 168, றீ.ஹரிஸ்ரன் குரூஸ் - 168, பெ.விவேகாசினி பச்சேக் - 168, தே. மரின் சனாமிக்கா – 167, நி.நிவோண்சன் குரூஸ் - 167, த.ஆன் நிஷாலி டயஸ் - 166, யூ.கி.லுவாங்சி குலாஸ் - 166, ஜெ. அபிஸ்ரன் - 164, சி.பவதாரணி – 163, நி.றொ. ஆகாஷ் துரம் - 162, பே. ஜோண்சியா – 162, ஜீ. எப்சிபா – 161, த. அஸ்விக்கா டலிமா – 161, யோ. மேரி அனஸ்கா – 160, வி. ஏன்றியா குரூஸ் - 160, இரா. டில்ருபின்சன் - 158, எ.க. லியானா – 158.

தங்கள் அர்ப்பணிப்பான சேவையை வழங்கிய, கல்லூரி அதிபர் திரு. செபஸ்ரியாம்பிள்ளை இராஜேஸ்வரன் பச்சேக், மற்றும் அயராத முயற்சியுடனும், கரிசனையுடனும் செயற்பட்ட தரம் 5 ஆசிரியர்களான, திருமதி. சுகுமாரன் நிரோ பச்சேக், செல்வி. அம்புறோஸ் மேரி ஜலின் குரூஸ், திருமதி. நிரஞ்சினி மெக்லஸ் பெர்னாண்டோ, திருமதி. ஜெசிக்கா நியூமன் குரூஸ், திருமதி. றொசிற்றா இளங்கோ பச்சேக் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.●

## நீங்காத நினைவுகள்

### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 03 1935

உதிர்வு 02 11 2018

**அருட்சகோ. வீர்ஜின் குரூஸ் (தி.கு.க.ச)**

(அதிபர்)

ஆண்டவன் அழைப்பின் ஆனந்தக் குரல் கேட்டு
ஆசிரியராய், அதிபராய் ஆற்றல் ஆளுமையுடன்
அமைதியாகப் பணியாற்றிய அன்பான மாமி அறிவான மாமி
உங்கள் இறப்பு எமக்கு பெரும் இழப்பு அடிக்கடி
எம் இல்லத்தை நாடி ஓடிவரும் மாமி உங்கள்
வருகையை எதிர்பார்த்து ஆறாது வாடி நிற்கின்றோம்.
மருமக்கள் எம்மவர்க்காய் மன்றாட மறக்காதீர்
அமைதியில் இளைப்பாறுங்கள்
சாந்தி... சாந்தி... சாந்தி...

பிரிவால் துயருறும்
மருமகன், யூட்குரூஸ் (ஆசிரியர்)
குடும்பத்தினர்.

### 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11 06 1946

உதிர்வு 07 01 2018

**திரு. கைத்தான் பர்னபாஸ் (பாப்பா)**

(பொன்தீவுகண்டல், முருங்கன்)

மூவிராசாக்கள் வருகையில் உம் உயிர் பிரிந்ததுவே வருடம்தோறும் உம்மை மறக்க முடியாமல் விழாக்களை கொண்டாட முடியாமல் எம் இதயத்தைவிட்டு பிரியாமல் இருக்கிறீர்களே பெரியப்பா! உமது பாடல்கள் தென்னை மரம் போல் அசைவாடுகின்றது. கண்ணதாசனின் வரிகள் கேட்டு பல வருடங்கள் ஆயிற்று உம் அன்பான பார்வையையும் அமைதியான முகத்தையும் மன்னா பத்திரிகையில் என்றும் நாம் காண்போம். இறைவனின் சந்நிதியில் இன்புற்று இருப்பீர் என நம்புகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## 1ம் பக்கத் தொடர்ச்சி
## மன்னார் மறைமாவட்டம் உதயமாகி...

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை அடிகளார் ஆகியோரின் வழிகாட்டுதலில் இவ்விழாவிற்கான ஆயத்தங்கள் இடம்பெறுகின்றன. மறைமாவட்டம் ரீதியில் நன்றியின் உணர்வோடு மறைமாவட்ட உதயத்தின் 40வது ஆண்டு யூபிலி விழாவை அர்த்தமுள்ள வகையில் நினைவுகூர வருகின்ற 25.01.2021 முதல் 29.01.2021 வரை அனைத்துப் பங்குகளிலும் ஆயத்த வழிபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ் யூபிலி நிகழ்வுத் திருப்பலியில் ஏனைய தமிழ் மறைமாவட்ட ஆயர்களும் அழைப்புப் பெற்றிருக்கின்றனர். மேலும் கோவிட் - 19 சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக பங்கிலிருந்து அழைப்புப் பெற்ற பிரதிநிதிகள் மட்டுமே இவ்விழாவில் கலந்துகொள்ள முடியும். ஆகவே மறைமாவட்ட நம்பிக்கையாளர் அனைவரும் அன்றைய நாளில் எங்கே இருந்தாலும் நன்றியுணர்வோடு உள்ளத்தாலும் உணர்வாலும் செபத்தாலும் ஒன்றிணைய அழைக்கப்படுகின்றீர்கள்.●

### 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 21 02 1955

விண்ணில் 09 01 2017

**திருமதி. எ.ஜோசப்பின் டயஸ்**

(பேசாலை)

*"என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடவார்" (யோவா 8:12)*

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 2021.01.09 சனி காலை 06 மணிக்கு பேசாலை புனித வெற்றியன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

நான்காண்டு போனாலும் நீ சென்று
நீங்காதுன் நினைவோ எம்மில் நின்று

பிரிவினால் வாடும்
கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

### 27, 21ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு.பேதிறுப்பிள்ளை திருமதி.பிரான்சிஸ்கா**

(இலந்தவான், அடம்பன்)

மலர்வு: 10.05.1920 மலர்வு: 10.02.1923
உதிர்வு: 20.01.1993 உதிர்வு: 08.12.1999

வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம்,
இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்.
ஆகவே வாழ்ந்தாலும் இறந்தாலும் ஆண்டவருக்கு
உரியவர்களாய் இருக்கின்றோம். (உரோ 14:8)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"என் நெஞ்சம் அமைதி பெற உம் திருமுன் வைத்துக் காத்தருளும்"



மலர்வு 19 06 1947

உதிர்வு 20 01 2020

**திருமதி.கிறுசாந்து திரேசம்மா**

(பெரியகுஞ்சுக்குளம், மாதாகிராமம்)

எங்கள் அன்பு ஆலோசனைக் குணக்குன்றே, தங்கம் பண்புடன் பக்குவம் வளர்த்த தனி நிகரே, உம்மோடு நாமிருந்தது அழகானதொரு காலமம்மா! அவை ஒவ்வொன்றும் உங்கள் அன்பினில் கரைந்திட்ட மறக்க முடியாத இனிமையான நாட்களம்மா! ஒருபோதும் பிரியாமல் எம்மை பாசமுடன் வளர்த்தீர்கள்! இன்று எமைப் பிரிந்து ஓராண்டு எப்படியம்மா இருக்கிறீர்கள்! பார்த்து பார்த்து ஆசையாய் வளர்த்து தவிக்க விட்டு விட்டீர்களம்மா! இன்று எல்லாம் இருந்தும் அம்மா என்றழைக்க நீங்கள் இல்லாமல் வாடுகின்றோம் அம்மா! நற்பண்புள்ள விருட்சங்களை உகந்தளித்த தாயமுதே உமது பிரிவால் கண்களில் கண்ணீர் சொரிந்து மனம் நொந்து வாடினாலும் விண்ணகத்தில் இன்புற்றிருக்க இறைவனை பிரார்த்திக்கின்றோம்...

பிரிவால் நினைந்துருகும் : கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.

# மன்னா


# நினைவு கூருகின்றோம்..!

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"மண்ணுலக வாழ்வின் உறைவிடம் அழிந்ததும்
விண்ணுலகில் ஒரு வீடு ஆயத்தமாய் இருக்கின்றது"



### திரு. சூசை மடுத்தீன் குரூஸ்

(6ம் வட்டாரம், வங்காலை)

மண்ணில் : 07.04.1939

விண்ணில் : 14.12.2019

பாசத்திற்கு இருப்பிடமாய், துயரத்தில்
மகிழ்ச்சியாய் எங்களுக்கு ஆருயிர் ஐயாவாய்,
எங்களை வழிநடத்திய ஐயா - ஏன்
பரிதவிக்க எங்களை பிரிந்து சென்றுவிட்டீர்.
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு
மாறாதய்யா, சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, அருமைப்பிள்ளைகள்
மற்றும் பாசமிகு உறவினர்கள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி. வாசிங்ரன் மேரிமாக்ரட் பிகிறாடோ (லலிதா)

(பள்ளிமுனை, மன்னார்)



மலர்வு 1947.08.20

உதிர்வு 2020.01.08

ஓராண்டு ஓடியும் ஓயவில்லை - உம்
நினைவலைகள் ஓயாமல் எம்மனதில்
ஓங்கியடிக்குதம்மா கரைகாணா ஓடம்போல
கலங்கி நிற்கும் எம் இதயம்
கண்ணீரை மட்டும் சுமந்திடுமோ இனி
காலமெல்லாம் எம் கண்கள் கலங்கி நிற்கும்
கணவனுக்கும் கதறியழும் பிள்ளைகளுக்கும்
கனவிலும் காட்டிடுவாயோ - உன் கனிவான
திருமுகத்தை...

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| உறவில் | பிரிவில் |
|---|---|
| 19 | 05 |
| 09 | 01 |
| 1953 | 2020 |

### திரு.அந்தோனி சந்தான் பெர்னாண்டோ

(வங்காலை - 04)

கண்படாத உயர் வாழ்வுடனும், புண்படாத இனிய பேச்சுடனும்
கறைபடாத தூய மனதுடனும், குறைபடாத
செல்வச் செழிப்புடனும் மறைபடாத ஆன்மீக வாழ்வுடனும்,
நரைபடாத நீடிய ஆயுளுடனும் பொய்படாத உயர்
ஒழுக்கமுடனும், கைகொடாத சிறந்த வள்ளலாகவும்
வாழ்ந்து காட்டிய உழைப்பால் உயர்ந்த உத்தமரே
களைப்பேயறியா கருணையாளரே அழைத்தாரோ இறைவன்
தன்னிடத்தே இளைப்பாற அங்கே இடம் கண்டனையோ

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரங்கள், உற்றார், உறவினர்கள்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்ந்தாய் | உதிர்ந்தாய் |
|---|---|
| 15 | 28 |
| 06 | 01 |
| 1982 | 2020 |

### திரு.யேசுராசா டொனால்ட் இன்பராஜ்

(மாவிலங்கேணி, முருங்கன்)

நீ இல்லாத முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள்..!
நீ இல்லாமலும் முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள்..!
இந்த இடைவெளி பெரியது மகனே!
மிகப்பெரியது நிரப்பப்பட முடியாதது எங்கள் செல்வமே..!
அமைதியில் நீ இளைப்பாற நீ தந்த அன்பின் நன்றியோடு
செபிக்கின்றோம்

பிரிவின் துயரில்
அம்மா, சகோதரர்கள், உன் அன்பு மருமக்கள், சித்தி,
உற்றார் உறவினரோடு உன் மாமி.

## 3ஆம் வருட நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27 | 26 |
| 06 | 10 |
| 1955 | 2017 |

### திருமதி. J.றோசாறி ஜெனிற்றா றோச்

(பள்ளிமுனை, மன்னார்)

கருவறை முதல் கல்லறை வரை நீங்கள் கொண்ட அன்புக்கு ஈடாகுமோ
வருடங்கள் மூன்று சென்றாலும் மறைந்து விடுமோ எம்மனதின் வலிகள்
உம் கரம் பிடித்து இம்மண்ணில் எம் கால் பதித்தோம். எம் கைகளினாலே
உம்மை அடக்கம் செய்து விட்டோமே அம்மா, காலங்கள் கடந்து
சென்றாலும் ஆறாதே உம் இழப்பின் வலிகள் தந்தையோடு எம்மை
தவிக்கவிட்டு தனியே சென்றதன் காரணம் என்ன ஆழிகூட வற்றி விடலாம்
ஆறிவிடுமோ எம் மனதின் வலிகள் கோடி கொடுத்தாலும் மீண்டும்
கிடைத்திடுமோ உம் மடிமீது தலைசாய்த்த அந்நொடிகள் மரணித்து
விட்டால் வற்றிவிடுமோ உமது அன்புக்கடல் இன்னும் பல
ஜென்மங்களானாலும் பிறக்க வேண்டும் உம் நாற்செல்வங்களாக

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 | 02 |
| 01 | 01 |
| 1962 | 2017 |

### திரு. சீமான்பிள்ளை மரியநாயகம்

(ஒலிமடு, நானாட்டான்)

அன்புள்ள அப்பாவே எங்கு நீங்க போனிங்க..! நாட்கள் பல
ஆயிடுச்சு எப்பதான் வருவீங்க..! நான் நேசிச்ச முதல் உறவு நீங்க
தானே அப்பா..! நான் சுவாசிச்ச முதல் கவிதை நீங்க தானே அப்பா..!
உங்க கை பிடிச்சு நா நடந்த பாதையில என்னை தேற்ற எனக்கொரு
நாதியில்ல காலம் பல ஆனாலும் உம் முகம் மறைந்திடுமோ அப்பா..!
கதறி நான் அழுதாலும் கண்ணீர் தீர்ந்திடுமோ அப்பா..! நடந்தது
எல்லாம் மறைந்திடுமோ அப்பா..! கடந்தது எல்லாம் கரைந்திடுமோ
அப்பா..! நீங்கள் காட்டிய பாதையில் நடக்கின்றோம் அப்பா..!
சமாதானத்தில் இளைப்பாறுங்கள் அப்பா..!

பிரிவால் வாடும்: மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவுகள்

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 | 20 |
| 12 | 12 |
| 1938 | 2014 |

### திரு. முத்தையா சுப்பிரமணியம் (லுபினாஸ்)

(சாவற்கட்டு)

அன்பின் உருவே! பாசத்தின் இலக்கணமே!
ஆண்டுகள் ஆறு கடந்து போனாலும்,
நீங்கள் என்றும் எம்மோடு, எம் மத்தியில்
வாழ்ந்து கொண்டே இருக்கின்றீர்கள் ஐயா!
உங்கள் புன்னகை பூத்த முகம் எம் கண்முன்னே
நிலையாய் நிற்குதய்யா! ஆறாத் துயரத்தில்
எம்மை ஆழ்த்தி விட்டுச் சென்று விட்டீர்களே!
உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற
நித்தமும் இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 21ம், 11ம் ஆண்டு நினைவேந்தல்கள்





| திரு. அந்தோனிப்பிள்ளை யாக்கோபு | திரு. யா.அன்ரனி ஜோஜ் |
|---|---|
| பிறப்பு :14.04.1938 | பிறப்பு : 20.08.1961 |
| இறப்பு : 14.01.1997 | இறப்பு : 09.12.2010 |

கற்றுத் தந்தவர்கள் நீங்கள் பற்று வைத்தவரும் நீங்கள் இனிய தருணங்களை எமதாக்கியவரும் நீங்கள் இற்று விடா இனிய வாழ்வை எமக்களித்து அதில் நீங்கள் அற்றுப் போனதேன். குடியிருந்த நாம் தவிக்கின்றோம் குதூகலிக்க நீங்கள் இன்றி நெஞ்சில் வலியுடனும் நீங்காத நினைவுகளோடும் வாழும்,

மனைவி, தாய், சகோதரர்கள், பிள்ளைகள்


"மன்னா பத்திரிகை"

மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
E-mail - mannamnrc@gmail.com/ Web: manna.lk /Fb- Mannar Catholic Media

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"

கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 0775338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகலவிதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.